# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, புரட்டாதி 7 உ (23—9—73) ஞாயிறு ஷஃபா: ஆகிர் 25 —புத்தகம் 27 இதழ் 4


## மக்கள் திலகத்திடம் இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் ஒரு கேள்வி!

(3-ம் பக்கம் பார்க்கவும்)



# தமிழர் பிரச்சினை பற்றி 20 ஆயிரம் சுவரொட்டிகள்!

## சென்னை மாநகரெங்கும் ஒட்டப்படும்!

## அக்டோபர் 3-ம் நாள் அஞ்சல் அலுவலகத்தின் முன் மறியல்

### கவியரசு கண்ணதாசன் அறிவிப்பு!

இலங்கைத்தமிழர் பிரச்சினையை யொட்டி ஐந்து அம்ச நடவடிக்கைகளை தமிழகத்தில் உடனடியாகமேற் கொள்வதென்று சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உலகத் தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம தலைமையில் நடைபெற்ற 'இலங்கைத் தமிழர் ஆலோசனைக் கூட்டத்தில், முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

இந்த ஐந்து அம்சநடவடிக்கைகளையும் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கவிஞர் கண்ணதாசன் எடுத்து விளக்கினர். அந்த 5 அம்சங்களும் வருமாறு:-

(1) இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திருமதி இந்திரா காந்தி தலையிட்டு என்னென்ன செய்யமுடியுமோ அவ்வவற்றைச் செய்யுமாறு இந்திரா காந்தியிடம் வற்புறுத்தவேண்டுமென தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரிடம் உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் தூதுக்குழுவாகச் சென்று கேட்டுக்கொள்வது.

(2) பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து. இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மனுவொன்றைக் கையளிப்பது.

(3) அக்டோபர் 2ம் திகதி தமிழகம் முழுவதும் துக்க தினம் அனுட்டிப்பதுடன் அதற்கு அடையாளமாக கறுப்புச்சின்னங்களை அணிந்து கறுப்புக்கொடிகளை எங்கும் பறக்க விடுவது.

(4) 3-10-73ல் சென்னை சத்திய மூர்த்தி பவனிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு மவுண்ட்ரோடு தபால் அலுவலகம் முன்னர் மறியல் போராட்டத்திலீடுபடுவது. அன்று மாலை பொதுக் கூட்டம் நடத்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையை தமிழக மக்களுக்கு எடுத்து விளக்குவது.

(5) இலங்கைத் தமிழர் படும் இன்னல்களை எடுத்து விளக்கக்கூடிய இருபதினாயிரத்துக்கு குறையாத சுவரொட்டிகள் அடித்து சென்னை மாநகரம் முழுவதும் ஒட்டுவது.

இத்திட்டங்களை வெளியிட்டுப் பேசிய கவியரசு கண்ணதாசன் மேலும் பேசுகையில் —'இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை என்பது உலகிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் உரிய பிரச்சினையென்றும் தார்மீக அடிப்படையில் மனித சமுதாயத்துக்குரிய பிரச்சினையாக கருகி அனைவரும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனம் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க தனிப்பட்ட முறையில் நம்மால் முடியாவிட்டாலும் நமக்காகச் சிலர் தமிழகத்தில் இருக்கிறார்கள்என்றுஎண்ணி

(7-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழருக்கு இந்தியா தந்த ஆயுதம்

"இலங்கை அரசாங்கம், இந்நாட்டுத்தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக சீனுவிடமிருந்து பெருந் தொகையான ஆயுதங்களை வாங்கிக் குவித்து வைத்திருக்கிறது. இலங்கைப் பிரதமர் சீனுவுக்கு சென்று கொண்டு வந்தது இதுதான்!

"ஆனல் நம்முடைய தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் கதிரவேற்பிள்ளை யோ இதற்குப்பதிலாக இந்தியாவுக்குசென்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்களைக் கண்டு பேசிசீன ஆயுதங்களுக்கு மாற்று ஆயுதங்களை கொண்டு வந்திருக்கிறார் அந்த ஆயுதத்துக்குப் பெயர்தான் அஹிம்சை!"

— கு. நேசையா

(உண்ணுவிரதக்கருத்தரங்கு ஒன்றில் பேசியது)

## சோசலிசமாம் சோசலிசம்...!

தங்கள் குடியுரிமையை நிரூபிக்கவில்லை என்ற காரணம் காட்டி கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக கொழும்புத் துறைமுகத்தில் பணிபுரிந்து வரும் நூற்றுக் கணக்கான இந்திய வம்சாவளித் தமிழ்த்தொழிலாளர்களை அண்மையில் திடீரென வேலை நீக்கம் செய்து அவர்களின் வயிற்றிலடித்துள்ளது சோசலிசம் பேசுகின்ற இன்றைய அரசு!

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் குடியுரிமைக்கோ—இலங்கைக் குடியுரிமைக்கோ விண்ணப்பிக்காதவர்கள்; வம்சாவளிப்பிரஜைகளாக இருந்தும் தங்களின் பிரஜாவுரிமைத் தகுதிகளை நிரூபிக்கப்

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண குடாநாட்டில் இராணுவ வெறியாட்டம்!

### தமிழர் கூட்டணியினர் பிரதமருக்கு தந்தி!

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் நியாயமற்ற முறையில் பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றனர்; இராணுவம் கட்டவிழ்த்துவிடப்பட்டு அட்டகாசம் புரிகிறது. கார்களுக்கு தீ வைக்கப்பட்டன; பொதுச் சொத்தும், தனியார் சொத்தும் சேதமாக்கப்பட்டுள்ளன; பெண்மணிகள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். இவைபற்றி உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை யெடுங்கள்—"

—இவ்வாறு கூறும் அவசரத் தந்தியொன்றை பிரதமருக்கு திருவாளர்கள் வி. என். நவரத்தினம் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை பா. உ, வி. தர்மலிங்கம் பா.உ. ஆகியோர் கடந்தவாரம் அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 17-9-73ல் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியையடுத்து இராணுவத்தினர் பொதுமக்களை வெறி கொண்டு தாக்கியது தெரிந்ததே.

## சோசலிசமாம் சோசலிசம்...!

அண்மையில் 14 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உதவி பொலிஸ் மாஅதிபர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 14பேரில் இருவர் மட்டுமே தமிழர்! சிங்கள சோசலிசத்துக்கு இதுவும் ஒரு 'சாம்பிள்'!

## உண்ணுவிரதம் வெற்றிக்குமேல் வெற்றி!

செப்டம்பர் 11ம் நாள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்று பதின் மூன்ருவது நாளாகவட்டுக் கோட்டைத் தொகுதியில் நடைபெற்று வரும் தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணுவிரதப் போராட்டம் பொது மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றிக்குமேல் வெற்றி அளித்து வருகிறது.

உண்ணுவிரத இயக்கம் தமிழ் ஈழத்தின் பட்டிதொட்டிகள் எங்கும்—கிராமங்கள்தோறும் — அரசியல் விழிப்புணர்வையும் விடுதலைப் பேரார்வத்தையும் ஏற்படுத்தி வருவதுடன் அடிமைமோகத்தையும் உடைத்தெறிந்து வருகிறது.

கிராம மக்கள் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் நாள்தோறும் திரண்டு வந்து உண் விரதம் இருக்கும் இளைஞர்களை வாழ்த்தி தங்கள் ஆதரவைத்தெரிவித்துப் போவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. பெண்களும் இதில் பெருமளவு ஆர்வம் காட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

உண்ணுவிரத இயக்கம் சாதி பேதம் கடந்து இன அடிப்படையில் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தியும் வருகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதம் ஏற்படுத்திவரும் தமிழ்த் தேசிய இன ஒற்றுமை!

செப்டம்பர் 11ம் நாள் மாலை 6 மணிக்கு யாழ் முனியப்பர் கோவிலின் முன்னால் தொடங்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது நாள் உண்ணாவிரதம் 12-9-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. தமிழர் தந்தை செல்வா, தமிழரசுத் தலைவர் நாவலர் அமிர் ஆகியோர் உண்ணாவிரதமிருந்த 20க்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் உண்ணாவிரதமிருந்த இளைஞர்களை வந்து பார்த்து வாழ்த்திச் சென்றனர். உண்ணாவிரதம் தொடங்கும் போதும், முடிவுறும்போதும் நடைபெறும் கருத்தரங்குகளிலும் ஏராளமானோர் பங்கேற்று கொள்கை விளக்கம் செய்து வருகின்றனர்.

முதல் நாள் முனியப்பர் கோவில் வாசலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின் இறுதியில் தமிழர் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றகருத்தரங்கில் கலந்துகொண்டு நாவலர் அமிர்தலிங்கம் பேசியதாவது:-

'உண்ணாவிரதம் இருந்ததால் உடல் வாடினாலும் உளம் வாடாமல் வைரம் பாய்ந்த உறுதியுடன் இருக்கும் இளைஞர்களை இங்கு நான் காண்கிறேன். இன விடுதலைக்காக அவர்கள் தம் உடலை வருத்தி மனோவைராக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த இளைஞர்களைப் போலவே ஒவ்வொருவரும் தம் நெஞ்சைத் தொட்டு விடுதலைக்காக நான் என்ன செய்தேன் என்று தம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

## தவம் வெல்லும்

'சங்கத் தமிழுக்காக, நம் சந்ததிக்காக தங்களை வருத்தி வாட்டி, வதைத்து வரும் வாலிபர்கள், உடல் வாடினாலும், உள்ள உறுதி மாறாத சிங்கங்கள்; வயிறுவாடினாலும், வைரம் பாய்ந்த உள்ளம் கொண்ட காளைகள் ஆரம்பித்துள்ள இந்த 'தவம்' இறுதியில் எமக்கு வெற்றியை அளிப்பது நிச்சயம்.

தமிழ் இளைஞர் பேரவை நடத்தும் போராட்டம் எங்கள் சந்ததியை வாழவைக்கும் போராட்டம். துடிதுடிப்போடு துள்ளி விளையாட வேண்டிய வயதில் உல்லாசமாக உலாவித்திரிய வேண்டிய வயதில் உண்ணாவிரதமிருந்து தங்களையே வதைக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். யாருக்காக இதனைச் செய்கிறார்கள்? தமிழினத்திற்காகச் செய்கிறார்கள்" இதனை நாம் உணரவேண்டும்.

## கரிபோல்டிபோல் அழைக்கிறோம்

இத்தாலிய விடுதலை வீரன் கரிபால்டி அற்பச் சலுகைகளைப் பெற்றுத் தருவேன், என்னுடன் சேருங்கள் என்று இளைஞர்களை அழைக்கவில்லை. என்னுடன் வந்தால் பசி, பட்டினி, சாக்காடு முதலானவைதான் உங்களுக்குக் கிடைக்கும், அவற்றைத் தாண்டிச் சென்றால் உரிமை பெற்ற இத்தாலி உங்களுக்குக் கிடைக்கும் என்று கூறியே இளைஞர்களை அணி திரட்டினான்.

ஐரிஷ் விடுதலை இயக்கம் 300 ஆண்டுகாலம் நடந்தது. அந்த மக்களே இறுதியில் வெற்றி பெற்றுர்கள். ஐரிஷ் பயங்கரவாதிகளின் குண்டுகள் இங்கிலாந்தில் இப்போதும் வெடிக்கின்றன. வினை விதைத்தவன் வினையைத் தான் அறுப்பான் என்பது போல ஆங்கிலேயர் இப்போது கஷ்டப்படுகிறார்கள். அக்கிரமத்தின் பலனை நடுநடுங்கி அனுபவிக்கின்றனர். இது இலங்கை ஆட்சியாளரும் உணர வேண்டிய பாடமாகும்.

எங்கள் இயக்கத்தில் ஈடுபட்டால் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். அதில்தான் நிலையான இன்பம் உண்டு. என்றென்றும் வாழும் நிலை ஏற்படும்.

## வெளியேற்றப்படுவர்

இந்த நேரத்தில் நாம் திரும்பத் திரும்ப வற்புறுத்தி கூறுவது தமிழனுக்கு என்று ஒரு தாயகம் வேண்டும், அந்த தாயகத்தில் இலங்கையில் எந்தப் பகுதியில் வாழும் தமிழ் மகனும் வந்து குடியேற உரிமை இருக்க வேண்டும் என்பதேயாகும்.

'தமிழர் தாயகத்தில் சிங்கள மக்கள் குடியேற்றத்தைத் தடுக்கா விட்டால்

# பட்டி தொட்டியெங்கும் விடுதலைப் பேரார்வம்!

## இயக்கத்துக்கு ஆளுங்கட்சி எம். எம். சி. ஆதரவு

—தமிழ் பிரதேசத்தில் மலைநாட்டுத் தமிழர்கள் குடியேறுவது தடுக்கப்பட்டால், —இன்றில்லா விட்டாலும், என்றாவது ஒரு காலத்தில் குடியேற்றப்பட்டவர்கள் வெளியேற்றப்படும், கட்டம் ஒன்று ஏற்படும் என்பதை உலக சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது.

தற்போது நடைபெறும் 50 நாள் உண்ணாவிரத இயக்கம் முடிந்ததும் மற்றும் சில தீவிரமான இயக்கங்கள் ஆரம்பிக்கப்படும்.

## வி. என். பேச்சு

திரு. வி. என். நவரத்தினம் பா. உ. பேசும் போது தமிழர் கூட்டணியின் திட்டங்களை தமிழ் இளைஞர் பேரவை திறமையான முறையில் செயல்படுத்தி வருவதாகவும், காந்திய வழியில்தான் உரிமைபெற முடியும் என்பதில் நம்பிக்கைவைத்து இளைஞர்கள் அறப்போரில் ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னார்.

ஊர்காவற்றுறை பா. உ. பண்டிதர் க. பொ. இரத்தினம் பேசும்போது, இளைஞர்களின் உறுதி, நேர்மை, தியாகம், எண்ணம், இந்த அரசை ஆட்டிவைத்து அழிவு ஏற்படும் போது தனியரசு பெறுவோம் என்று கூறினர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசும்போது உண்ணாவிரதம் எதிரிகளைக் கூட அனுதாபப்படச் செய்வதோடு அவர்களின் ஆதரவையும் பெற்றுத்தர வழி செய்யும் எனக் கூறினர்.

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. வரதராசா பேசும் போது இனி மேல் ஒரு நாள் உண்ணாவிரதத்தை நடத்த மாட்டோமென்றும், சாகும் வரை உண்ணாவிரதத்தை நடத்துவோம் என்றும் கூறினர்.

## இரண்டாம் நாள் போராட்டம்

இரண்டாம் நாள் உண்ணாவிரதப் போராட்டம் குருநகர் கலையரங்கில் 12-9-73 மாலை 6.00 மணிக்கு ஆரம்பித்து 13-9-73 வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு முடிவுற்றது. இந்த உண்ணாவிரதத்தின் போது பத்து வயது பாலகன் ஒருவனும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இச்சிறுவன் உண்ணாவிரதத்தின் இறுதிக் கட்டத்தில் மயக்கமடைந்த போதிலும் — உண்ணாவிரத நேரம் முடிவடைந்த பின்னரே அவனுக்கும் பழரசம் கொடுக்கப்பட்டது.

## 40,000 இளைஞர் பங்கேற்கும் போராட்டம்

தேசிய கீதத்துடன் உண்ணாவிரதம் முடிவடைந்த பின்னர், நடைபெற்ற கருத்தரங்கில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

'உண்ணாவிரதம் அஹிம்சைப் போராட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. மிகப் பெரிய அறப்போராட்டத்திற்கு தங்களை ஆயத்தம் செய்வதற்காக திட்டமிட்ட இந்த 50 நாள் உண்ணாவிரதத்தை இளைஞர்கள் ஆரம்பித்துள்ளனர்.

40,000 இளைஞர்கள் ஒரே நேரத்தில் சிறை செல்லக் கூடிய மிகப் பெரிய போராட்டம் ஒன்றை நடத்த தமிழர் கூட்டணி திட்டமிட்டு வருகிறது. அதற்கு முன்னோடியாக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும், தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தவுமே இந்த உண்ணாவிரதம் நடத்தப்படுகிறது.

திருவாளர்கள் நாவலர் அமிர்தலிங்கம், இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு. புஷ்பராசா, ஆகியோரும் அங்கு உரை நிகழ்த்தினர்.

## மூன்றாவது நாள் போராட்டம்

மூன்றாவது நாள் உண்ணாவிரதப் போராட்டம் கொழும்புத்துறை கடற்கரையில் 13-9-73 வியாழக்

# பத்து வயதுச் சிறுவனுக்கும் பொங்கி வழிகிறது இன உணர்வு!

கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 14-9-73 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

உண்ணாவிரத இயக்கம், தமிழ் மக்களின் உள்ளங்களில் தைத்து, அவர்களை ஒற்றுமைப்படுத்திட உதவி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக யாழ் சிறீலங்கா சுதந்திரக் கட்சி கிளையின் உறுப்பினரும் யாழ் மாநகர உறுப்பினருமான [illegible] உண்ணாவிரதத்தை [illegible] தார்.

அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:- தமிழினத்தின் விடுதலைக்கான இம்மாதிரி போராட்டங்களில் நாம் கட்சி பேதம் பாராட்டக் கூடாது. தமிழ் மக்கள் என்ற வகையில் அனைவரும் ஒன்றுபட்டு நின்று இன விடுதலைக்கு வழிகாணவேண்டும்.

'நானும் இந்த இயக்கத்தில் பங்குபற்றுவேன் என்று எண்ணியிருக்கவில்லை. இன்று தமிழ் மக்களின் உரிமைகள் ஒன்றின் பின் ஒன்றாகப் பறிக்கப்பட்டு, அடக்கு முறையில் ஆட்சியாளர்கள் தமிழர்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றனர். இவற்றை அவதானித்துத்தான் கட்சி அரசியல் வேறுபாடுகளை விட்டு, தமிழினம் என்ற ரீதியில் இந்த இயக்கத்தில் கலந்துகொள்ள முன்வந்துள்ளேன்.

'இன்று இந்த இயக்கத்தில் 20 வாலிபர்கள் பங்கு பற்றினாலும் நாளை 200 இளைஞர்களாகி மறுநாள் 2000 இளைஞர்களாகி 20 லட்சம் மக்கள் கலந்து கொள்ளக்கூடிய காலம் நிச்சயம் வரும்.

உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

'42 தமிழ் இளைஞர்கள் எந்தவித விசாரணையுமின்றி மாதக்கணக்கில்சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். அதைத் தட்டிக் கேட்பதற்கே இளைஞர்கள் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர், மிகப் பெரிய அறப்போராட்டத்திற்குத் தங்களைத் தயார் செய்து கொள்வதற்ககவே 50 நாள் உண்ணாவிரதத்தை இளைஞர்கள் ஆரம்பித்துள்ளனர்.

50 நாள் உண்ணாவிரதம் முடிவடைந்தபிறகு எங்கள் அறப்போராட்டத்துக்குப் பெரும் இளைஞர் பட்டாளம் ஒன்று உருவாக்கப்பட்டு விடும். இந்தப்பட்டாளத்தை உருவாக்குவதற்காகத்தான் இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. நேசையா, பண்டிதர் கா. பொ. இரத்தினம் அடலேறு ஆலால சுந்தரம், வழக்கறிஞர் தா. சங்கரப்பிள்ளை வழக்கறிஞர் எஸ். சி. மகாதேவா, வழக்கறிஞர் ஆர். விசுவநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## நான்காவது நாள் போராட்டம்

உண்ணாவிரத இயக்கத்தின் நான்காவது நாள் போராட்டம் 14-9-73 மாலை 6.00 மணிக்கு உடுவில் தொகுதியைச் சேர்ந்த ஏழாலை வடக்கில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை அலுவலகத்தின் எதிரே ஆரம்பமாகி15-9-73 மாலை 6.00மணிக்கு முடிவுற்றது. சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம், உண்ணாவிரதம் இருந்த இளைஞர்களுக்கு பழரசம் கொடுத்து விரதத்தை முடித்து வைத்தார்.

பின்னர் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் நவம் பேசியதாவது:-

'தமிழினம் இன்று தன்னைத் தானே ஆளுகின்ற நிலைக்கு வந்துள்ளது. புதிய அரசியல் அமைப்பைத் தமிழர்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதை மட்டுமல்ல, இந்நாட்டு மலையகத்-தமிழருக்கு ஏற்படும் இன்னல்களை, தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை, தமிழ் இளைஞர்களான 42 பேரையும் சிறையில் வாட்டி வதைப்பதை எல்லாம் இன்னும் தமிழினம் பார்த்துக்கொண்டிராது என்பதை இங்குள்ள ஏராளமான பெண்களும், இளைஞர்களும் உணர்ந்து விட்டனர் என்பதையே இங்கு கூடியிருக்கும்மக்களைப் பார்த்ததும் நான் உணர்கின்றேன்.

'தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டுமானால் தமிழன் முதலில் தன்னைத்தானே உணரவேண்டும் எமக்கிடையேயுள்ள களைந்தெறியப்பட வேண்டிய விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

'இன்று தமிழ்ப் பிரதேசங்களிலே எத்தனையோ இடங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஆலயத்திற்கு வெளியே நின்று கும்பிடுவதைப் பார்க்கிறோம். தாழ்வுற்ற தமிழினத்திற்கு இதுவும் ஒரு சாபக்கேடா? இந்த நிலையை நாம் அகற்றவேண்டும். ஒவ்வொரு தமிழனும், குறைந்தசாதி, கூடிய சாதி என்ற பாகுபாட்டுக்குள் கிடந்து உழையாது தோளோடு தோள் நின்று எமது பிரதேசங்களை நாமே வளங்கொழிக்கச் செய்ய முன்வரவேண்டும்.

## ஐந்தாவது நாள் போராட்டம்

இளைஞர் பேரவையின் ஐந்தாவது நாள் உண்ணாவிரதப் போராட்டம் உடுவில் தொகுதியிலுள்ள சுதுமலை சுர் அடிவைரவர் கோவில் ஆலய முன்றலில் 15-9-73 மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி 16-9-73 மாலை 6. மணிக்கு முடிவுற்றது.

இங்கு நடைபெற்ற கருத்தரங்கில் உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம், ச. முத்துலிங்கம், சு. நடராசா வி. என். நவரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை, திருமதி. அமிர்தலிங்கம், புஷ்பராசா, வரதராசா, பிரான்சிஸ் ஆகியோர் உரையாற்றினர்.

## ஆறுவது நாள் போராட்டம்

ஆறுவது நாள் உண்ணாவிரதம் போராட்டம் உடுவில் தொகுதியில் கந்தரோடை சன சமூக நிலையத்தின் அருகில் 16-9-73 மாலை 6.00 மணிக்கு கருத்தரங்குடன் ஆரம்பமாகி 17-9-73 மாலை 6 மணிக்கு கருத்தரங்குடன் முடிவுற்றது. 17-9-73 அமரர் வன்னியசிங்கம் அவர்களின் நினைவு தினம் ஆனதால் அமரரின் திருவுருவம் தாங்கிய படத்தை உண்ணாவிரத தொண்டர்கள் தம்முடன் வைத்திருந்தனர். பெருந்திரளான மக்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கந்தரோடையில் முன்னாள் சுதந்திரக்கட்சிப் பிரமுகரும் சுன்னாகம் ப. ச. உறுப்பினருமாகிய திரு. எம். நடராசா தலைமையில் நடைபெற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

அன்பு நண்பா,

அன்ருெர் நாள் — ஆதவன் அந்தமிக்காத சாம்ராச்சியம் எனப்பெயரெடுத்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அஹிம்சாவழியில் காந்தியார் போர்க்கொடி ஏந்திய போது — உப்பை அள்ளிச் சட்டத்தை மீறியபோது — எட்ட நின்று ஏளனம் பேசியோர், கைகொட்டி நகைத்தோர்—கிழவனுக்கு பைத்தியம் என்று கூறி கிண்டல்களைதொடுத்தோர் — ஏராளம், ஏராளம்! அரை நிர்வாணப்பக்கிரி என்று அண்ணல் காந்தியை கிண்டல் செய்து பரிகசித்த வெள்ளைக்கார ஏகாதிபத்தியம்—ஈற்றில் அஹிம்சைக்கு முன்னல்—சத்தியத்துக்கு முன்னல்—தாக்குப்பிடிக்க முடியாது இந்திய நாட்டை விட்டு ஓடவேண்டியேற்பட்டது வரலாறு கூறுகின்ற மறுக்கொணு உண்மையாகும்!

இங்கும் ஒருவர்—வெள்ளையருக்கு முன்னல் நம்மை அடக்கியாண்டு ஆதிக்கம் புரிந்த பரங்கி இனத்தைச் சேர்ந்தவர் — அஹிம்சையிலும் சத்தியத்திலும் துளியும் நம்பிக்கை வைக்காத ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர் — திருவாளர் பீட்டர் கெனமன் அவர்கள் சில கிழமைகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது நம்முடைய தமிழ் இளைஞர் பேரவை மேற்கொள்ள விருந்த உண்ணுவிரதப் போராட்டத்தை பற்றி கேலியும் கிண்டலும் செய்து பேசியதை நீ மறந்திருக்கமாட்டாய்!

அஹிம்சையின் முக்கியத்துவத்தை — ஆத்மீக சக்தியின் அருமையை உணர முடியாததும் பலாத்காரப்புரட்சியையே தன் அரசியல் தத்துவமாகக் கொண்டதுமான ஓர் இயக்கத்தை சேர்ந்தவர்—அதுவும் வெள்ளைத்தோல் மரபில் உதித்தவர் — உண்ணுவிரதம் பற்றி இப்படிக் கிண்டல் செய்திடுவதில் நமக்கு ஆச்சரியம் எதுவும் இல்லை! கர்ப்பூரவாசனையின் சுகானுபவத்தை 'எதருலோ' அறிந்திடமுடியுமா?

சிங்கள இளைஞர்கள் இரு ஆண்டுகளுக்கு முன் பலாத்காரப்புரட்சியில்—ஆயுதப்புரட்சியில் இறங்கிய போது அவர்களை நசுக்கி அழித்தது போல் — தமிழ் இளைஞர்களும் ஆயுதம் தாங்கி பலாத்காரத்தில் இறங்குவார்கள்; அவர்களை அப்படியே மூட்டைப்பூச்சி போல நசுக்கி விடலாம் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு — அஹிம்சைப்பாதையில் அறமெனும் ஆயுதத்தை—தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுதததது பெருத்த ஏமாற்றத்தைக்கொடுத்து விட்டது; அதனால் ஏதேதோ பேசுகிறார்! எப்படியெல்லாமோ உளறுகிறார்!! என்னென்னமோ பிதற்றுகிருர்!

ஆம் நண்பா, அறவழிப் போராட்டம் — அஹிம்சை நெறிப்போர் முறை — என்றுமே நயமை வீழ்த்த முடியாத ஒரு போராட்ட முறையாகும். எதிரியின் பிடியில் சிக்கிக்கொள்ளாமல்—எந்தக்கட்டத்திலும் சரணுகதியடையாமல்—தோல்வியைத்தழுவாமல் — இலட்சியத்தில் வெற்றி பெறுமட்டும் தொடர்ந்து போராடுவதற்கு ஏற்ற ஆயுதம் அஹிம்சை தான்! வைரம் பாய்ந்த உள்ளமும் — உறுதியான இலட்சியப்பற்றும் — சத்தியத்தில் நம்பிக்கையும்கட்டுப்பாடுமே அஹிம்சாபோராட்டவாதிகள் ஏந்த வேண்டிய ஆயுதங்களாகும்.

அந்த ஆயுதங்களைப் பெறுவதற்காகவும்—தமிழ் மக்களிடையேயுள்ள அடிமை மோகத்தைக்களைந்தெறிந்து, சுயராச்சிய உணர்வை தூண்டுவதற்காகவும், தமிழினத்துக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை அகில உலகும் அறிவதற்காகவுமே பட்டினி கிடந்து தம்மைத்தாமே வருத்தி தொடர்ச்சியாக 50 நாட்களுக்கு தவமிருந்து வருகிருர்கள் நம்முடைய தமிழ் இளைஞர்கள் — சென்ற செப்டம்பர் 11ம் நாள் முதல்!

துள்ளித்திரிகின்ற பள்ளிப்பருவத்தினர் — இளைய தமிழ் சமுதாயத்தினர்—ஊண் மறந்து உணவு மறந்து உல்லாச வாழ்வை மறந்து — சல்லாபிக்கும் காதலியரை மறந்து—வாழ்வின் வசந்த காலம் என்று கூறப்படும் இளமைக்

## அறம் வெல்லும்!

## அறம் கொல்லும்!!

காலத்தில்—பட்டினி கிடந்தது பசியால் மெலிந்து பதை பதைக்கும் வெய்யிலிலே தவம் செய்துவருகிருர்களே — இது எதற்காக என்பதை நம்முடைய தமிழர் சமுதாயம் சிந்தித்திட வேண்டும்!

நண்பா—நம்முடைய தமிழ் இளைஞர்களின் ஆத்மீகப்போராட்டம் — அறநெறியின் வலிவு அந்தப் போராட்டத்தைக்கேலி செய்தவரையும், அவரது கட்சியையும் இன்று எந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டிருக்கின்றது என்பதைக் கவனித்தனையா?

தமிழ் இளைஞர் பேரவையின் உண்ணுவிரதம் யாழ்நகரில் ஆரம்பமான இரண்டொரு நாட்களுக்கிடையில் – அந்த உண்ணுவிரதத்தைக் கேலிசெய்த பீட்டர் கெனமனின் கம்யூனிஸ்ட்கட்சி, ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டது; பதவிப்பித்தராய் மாறி கட்சிக்குத்துரோகம் புரிந்து வரும் பீட்டர் கெனமனை அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமைப்பீடமும் பிடரியில் பிடித்து வெளியேற்ற துடித்து நிற்கிறது. உண்ணுவிரதத்தை கேலி செய்த பீட்டர் கெனமன் இன்று அரசியலில் அங்கிடுதத்தியாய் தவிக்கின்ற நிலையிலிருக்கின்ருர் என்ருல் நம்முடைய தமிழ் இளைஞர்களின் உள்ளத் தூய்மையுடன் கூடிய தவவலிமையை என்ன சொல்லிப் பாராட்டுவேன்!

நண்பா, தமிழ் மக்களுக்கு எதிராக கொடுமை இழைப்போர் — தமிழ் மக்களின் அறவழிப்போரை கேலிசெய்வோர் அறத்தின் தண்டனையிலிருந்து தப்பினுர்கள் என்பதற்கு இந்நாட்டு அரசியல் வரலாற்றில் ஆதாரமே கிடையாது!

1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் சத்தியத்தையே துணையாகக் கொண்டு கொட்டும் மழையில் காலிமுகக் கடற்கரையில் அறப் போரில் ஈடுபட்ட தமிழ்த்தலைவர்களையும் தொண்டர்களையும் நனைந்த வாத்துக்கள் என்று கேலிபேசினுர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா! 1958ம் ஆண்டு தமிழ் மக்கள் சிங்கள வெறியர்களால் கொடுமைப் படுத்தப்பட்டபோது—தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டபோது—தமிழர் கடைகள் சூறையாடப்பட்டபோது—ஊரடங்குச் சட்டத்தை உடனடியாகப்போடாமல் 24 மணி நேரம் அந்தக்காட்சிகளை பார்த்து ரசித்தார் திரு. பண்டாரநாயகா; இறுதியில் 'அறம்' அவருக்கு என்ன தண்டனை கொடுத்தது என்பதை இந்த நாடறியும்!!

எனவே தான் நண்பா—நம்முடைய தமிழ் இளைஞர்கள் சிறையினுள்ளேயும் வெளியேயும் இன்று படுகின்ற துன்பங்களுக்கு—வடிக்கின்ற கண்ணிருக்கு தாங்குகின்ற கொடுமைகளுக்கு—என்ருே ஒருநாள் இந்த ஆட்சியினர் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்! இந்த இளைஞர்களைப் பெற்றெடுத்த நம் தாய்க் குலத்தின் திருவிளக்குகள்—தியாகச்சுடர்கள்—இன்று சிந்துகின்ற கண்ணீர்த்துளிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அணுகுண்டுகளாக மாறி நீதியை நிலைநாட்டியே தீரும் என்பதில் எனக்குஉறுதியான நம்பிக்கையுண்டு!

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருகும் என்பது நம்முடைய சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துச் சொல்கின்ற பேருண்மையாகும்! எனவே அரசியல் பிழைத்து—தமிழினத்தை நசுக்கத்துடிக்கின்ற இன்றைய சிங்கள ஆட்சிக்கு அறமே கூற்ருக வரப் போகும் காலம் அதிக தூரத்தில் இல்லை!அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே அரசியல் வானில்தெரிய ஆரம்பித்துவிட்டன!

எனவே நம்முடைய தமிழ் இளைஞர்கள் எந்தக் கட்டத்திலும் அறவழியிலிருந்து விலகாது—அஹிம்சை நெறியிலிருந்து புரளாது — தமிழ் ஈழ சுயாட்சிப்போரை தொடர்ந்து நடத்துவார்களானல் வெற்றி நமதே என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

## எம். ஜி. ஆரும் 'இலண்டன் முரசு'ம்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் வெறும் சினிமா நடிகர் மட்டுமல்ல — அண்ணு தி.மு.க. என்ற அரசியல் கட்சியொன்றின் தனிப்பெருந்தலைவர்; அக்கட்சியின் ஸ்தாபகரும் கூட!

பேரறிஞர் அண்ணு அவர்களின் பாதையையே தனது பாதையாகக் கொண்டு — அண்ணுவின் கொள்கைகளையே தனது மூச்சாகக்கொண்டு—அண்ணு தி.மு.க. செயல்படும் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் அழுத்தம் திருத்தமாக கூறிவருகிருர்.

இலங்கைத் தமிழர்கள் எம்.ஜி.ஆர். மீது பெருமதிப்புகொண்டுள்ளார்கள் என்ருல்—அவர் சினிமா நடிகர் என்பதால் அல்ல; அரசியல் தலைவர்—அதுவும் அண்ணுவின் தம்பி என்பதால் தான்!

அண்ணு வழியிற் செல்வதாக கூறுகின்ற எம ஜி.ஆர் — இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அண்ணு பின்பற்றிய அதே கொள்கைகளையே பின்பற்றுவார் என்பதே ஈழத்தமிழர்களின் நம்பிக்கை!

அண்ணு — ஈழத்தமிழர்களுக்கு இன்னல் நேர்ந்த போதெல்லாம் துடிததெழுந்தவர்;ஈழத்தமிழர்களின் விடுதலைப்போரை ஆதரித்து ஏடுகளில் எழுதியவர்; கூட்டங்களில் உரிமைக்குரல் எழுப்பியவர்!

இலங்கை அரசின் அடக்கு முறையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் 1961-ம் ஆண்டு கண்டன நாள் கூட்டங்கள் நடத்தியவர்—

அப்படிப்பட்ட அண்ணுவின் தம்பியாக இருந்த எம் ஜி ஆரும் அவரது புதிய கட்சியும் அண்ணுவைப் போலவே இலங்கைத் தமிழர் மீது அனுதாபமும் அக்கறையும் ஆர்வமும் உள்ளவராக இருப்பார் என்றே ஈழத்தமிழர்கள் நம்புகிருர்கள்—

ஆனல் அந்த நம்பிக்கையை பொடிப் பொடியாக்குகிறது எம்.ஜி.ஆர்.கூறியதாக 'இலண்டன் முரசு' ஏட்டில் வந்திருக்கும் ஒரு செய்தி.

எம்.ஜி.ஆரா இப்படிக் கூறினுர்?

நம்மால் நம்பவும் முடியவில்லை — நம்பாமல் இருக்கவும் முடியவில்லை—

'இலண்டன் முரசு' தமிழ் ஆர்வமுள்ள தமிழன் பர்களால் நடத்தப்படுகின்ற ஒரு ஏடு; உலகெங்கும் வாழுகின்ற தமிழர்களினதும், குறிப்பாக இலங்கைத தமிழர்களினதும் உரிமை வாழ்வில் அக்கறையுள்ள ஏடு!

அத்தகைய ஏடு எழுதியுள்ளதை நம்பாமல் நம்மால் இருக்கவும் முடியவில்லை!—

அதே வேளையில் தந்தை செல்வாவுடன் சென்னை சென்றிருந்தபோது — எம்.ஜி.ஆரைச் சந்தித்த சமயத்தில்,இலங்கைத தமிழருக்காக எவ்வளவு ஆர்வமுடன் தீவிரமாக அவர் பேசினுர்என்பதை இன்று எண்ணிப்பார்க்கும் போதும் இதயம் சிலிர்த்திடுகிறது—

அப்படிப்பட்ட எம்.ஜி.ஆரா இப்படிப் பட்ட ஒரு கருத்தை தெரிவித்தார்?

தி.மு.க.வை விட்டு வெளியேறியதுடன் இலங்கைத் தமிழரையும் எம்.ஜி.ஆர். கைவிட்டு விட்டாரா?

சிங்கள ரசிகர்களுக்காக இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் சிங்கள இன வெறியர்களின் காலடியில் நசுக்கப்படுவதை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.ஆதரிக்கப்போகிருரா?

நாம் நம்பவில்லை—

## சிங்கள ரசிகர்களுக்காக இலங்கைத் தமிழருக்கு துரோகம் செய்பவரா எம். ஜி. ஆர்.?

எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்து இதற்கான விளக்கத்தை இலங்கைத் தமிழ் மக்களும் நாமும் எதிர்பார்க்கிறேம்.

இதோ பிரச்சினைக்குரிய அந்த 'லண்டன் முரசு' செய்தி:—

'இக்கரைச்சிமையில் எம. ஜி. ஆர்''

(1) இலங்கையில் தமிழர்களின் பிரச்சினை உச்ச கட்டத்தை யடைந்துள்ளது; இது பற்றி அண்ணு தி. மு. க. என்ன செய்யும் என லண்டனில் நடைபெற்ற கூட்டமொன்றில் கேள்வியொன்றைக் கேட்டார் துடிப்புள்ள தமிழ் இளைஞர் ஒருவர். அதற்கு எம். ஜி. ஆர். அளித்தபதில்:—

''ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் ஒற்றுமையின்றி பிளவுபட்டுள்ளனர்; சாதிப்பாகுபாடு மிகுந்துள்ளது. இந்த நிலையில் தமிழர்கள் தம் உரிமைக்காக எப்படிப் போராட முடியும்? மேலும் சிறீலங்காவில் எனக்கு சிங்கள ரசிகர்களும் ஏராளமாக உள்ளனர்.

(2) இலண்டன் முரசிற்கு அளித்த பேட்டியின் போது இலங்கைத்தமிழர்பற்றிய இன்றைய நிலைபற்றி கேள்விகள் கேட்கப்பட்ட போது எம். ஜி. இராமச்சந்திரன் அளித்த பதிலை வெளியிட்டு தமிழர்களிடம்அவருக்கு இருக்கும் நல்ல மதிப்பை நாம் கெடுக்க விரும்பவில்லை.''

— கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வெறி நாய்களைக் கட்டிவையுங்கள்

காங்கேசன்துறைத்தொகுதியில் கடந்த ஓராண்டாக இடைத்தேர்தலை நடத்தாததற்கு ஆட்சியாளர்கள் கூறி வருகின்ற ஒரே காரணம்—திரும்பத்திரும்ப பாடிவருகின்ற ஒரே பல்லவி—வடபகுதியில் வன்முறை நடைபெறுகிறது என்பதுதான்!

எங்கே எந்த இடத்தில் எந்த வன்முறை நடைபெற்றது? சுட்டிக்காட்டுங்கள் என்று கேட்டோம்—பதில் இல்லை!

அப்படித்தான் நீங்கள் கூறுகிறபடி வன்முறை நடைபெறுவதாக வைத்துக்கொண்டாலும் கூட — அந்த வன்முறைச்சம்பவங்களை கடந்த ஓராண்டாக அடக்கி இடைத்தேர்தலை நடத்த உங்களால் முடியாவிட்டால் எதற்காக வெட்கம், ரோசம், மானம், சூடு, சொரணை எதுவுமற்று ஆட்சியதிகாரங்களைக் கையில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டோம் — அதற்கும் பதில் இல்லை!

ஆனால் வடக்கில் வன்முறையை வளர்த்து வருபவர்கள்—கலவரத்துக்கு கால்கோளாக இருப்பவர்கள் — யார் என்ற உண்மை இப்போது தானாகவே அம்பலத்துக்கு வந்துவிட்டது!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் வடக்கில் வெறிநாய்கள் போல அவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஆட்சியாளர்களின் சேவகர்களான ஆயுதப்படை வீரர்களே வன்முறையை அங்கு தூண்டிவிட்டு வருகிறார்கள்; வன்முறை நடவடிக்கைகளில் அவர்களே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற மறைக்கமுடியாத உண்மை இப்போது அம்பலமாகி விட்டது.

பொதுமக்களையும், அரசாங்கச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென்று அரசாங்கத்தால் அங்கு அனுப்பப்பட்டவர்கள்—பொதுமக்களை இம்சைப்படுத்தியும், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தும் வருகிறார்கள்!

வெறிபிடித்த இராணுவவீரர்களால் தமிழ் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள்; அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படுகிறார்கள்; தனிப்பட்டோரின் சொத்துக்களும் பொதுச்சொத்துக்களும் நாசமாக்கப்படுகின்றன; என்ற உண்மையை தமிழர் கூட்டணியைச் சேர்ந்த நான்கு தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் பிரதமருக்கு தந்தி மூலம் அறிவித்து உரிய நடவடிக்கை யெடுக்கப்படவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள்!

வடபகுதியில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது இராணுவ தாக்குதல் நடைபெறுவது இதுவே முதல் தடவையல்ல—உதைபந்தாட்டபோட்டியை அடுத்து கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவவெறியாட்டம் வடக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற இராணுவக் கொடுமைக்கு ஒரு சின்ன உதாரணமாகும் — ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம்போல!

முப்பதுகோடி ரூபாவை ஆண்டுதோறும் கொட்டி பலிக்கடாக்கள் போல இராணுவ வீரர்களை ஆட்சியாளர்கள் கட்டி வளர்ப்பது பொதுமக்களை இம்சைப்படுத்துவதற்கும் பொதுச்சொத்துக்களை நாசப்படுத்தவும்தானா?

உணவுற்பத்தியை பெருக்கும்படி பொதுமக்களைக்கோருகின்ற இந்த அரசு இராணுவ வீரர்களையும் அதற்குப் பயன்படுத்தலாமே! காடுகளை வெட்டி களனியாக்கலாமே!

அதை விடுத்து இரத்தப் பசியெடுத்த வேங்கைகள் போன்ற—இராணுவ வீரர்களை ஊருக்குள் நடமாட விட்டு அப்பாவிப் பொதுமக்களைக்கொடுமைக்கு ஆளாக்குவதேன்?

வன்முறையைக்கட்டுப்படுத்தவேண்டிய இராணுவ வீரர்களே வன்முறையிலும், நாசவேலைகளிலும் ஈடுபட்டால் — ஆத்திரமடைந்த பொதுமக்களும் ஏட்டிக்குப் போட்டியாக வன்முறையில் நாட்டம் கொள்வது சகஜம் தானே!

எனவே ஆட்சியாளர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம்—

வெறிநாய்களை—இரத்த வெறிகொண்ட வேங்கைகளை—கட்டிவையுங்கள்! இன்றேல்—இராணுவ வீரர்களின் தான்தோன்றித்தனமான போக்கு தொடர்ந்து அனுமதிக்கப்பட்டால் அதன் பெறுபேறு ஓர் உள்நாட்டுப் போராகவே முடியும் என்று அஞ்சுகிறோம்.

---

# புதிய காரியாதிகாரி அலுவலகம் புங்குடுதீவுக்கு நிச்சயம் கிடைக்கும்!

## பொய்ப்பிரசாரம் செய்வோருக்குப் பண்டிதர் இதோ தருகிறார் பதில்!



ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு நான் பாராளுமன்ற உறுப்பினரானவுடன் முதலில் செய்த முயற்சி தீவுப்பகுதி காரியாதிகாரியை மாசமொரு நாளாகுதல் அனலைதீவு, நயினாதீவு புங்குடுதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி வேலணை எனும் ஆறு இடங்களிலுள்ள கிராமச்சபை அலுவலகங்களுக்குச்சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அங்கங்கே தீர்க்குமாறு பணிக்கும்படி அமைச்சர் மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை நேரிலும் எழுத்து மூலமும் வற்புறுத்தியதே யாகும்.

ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள், காரியாதிகாரியைச் சந்திப்பதற்குப் படும் பாட்டினை நான் நன்கு உணர்ந்தமையால் முதலில் இந்த ஒழுங்கைச்செய்யுமாறு அமைச்சரையும் யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் கேட்டேன். இது குறித்து நடவடிக்கை எடுத்து வரும் பொழுது, காரியாதிகாரி பிரிவுகளைப் பிரித்து மாகாண நிருவாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப் படுத்தமுடிவு செய்தது.

இதனால் தீவுப்பகுதிக்காரியாதிகாரிபிரிவில் இருந்து காரைநகரை நீக்கி ஏனைய பகுதியை இரண்டுகாரியாதிகாரி பிரிவுகளாக்கும் படியும், புதிய காரியாதிகாரி அலுவலகத்தைப் புங்குடுதீவில் நிறுவுமாறும் நான் அமைச்சரையும் அரசாங்க அதிபரையும் கேட்டேன்.

எனினும் அரசாங்க அதிபர் காரைநகரைப் பிரிக்காமல்தீவுப்பகுதி வடக்கு தீவுப்பகுதி தெற்கு என இரண்டாகப் பிரித்து, தீவுப்பகுதி வடக்குக் காரியாதிகாரி அலுவலகத்தை ஊர்காவற்றுறையிலும் தீவுப்பகுதி தெற்குக் காரியாதிகாரி அலுவலகத்தை வேலணையிலும் நிறுவலாம் எனவும் தீவுப்பகுதி தெற்கைப் பின் இரண்டாக பிரித்துப்புதிய பிரிவின் காரியாதிகாரி அலுவலகத்தைப் புங்குடுதீவில் நிறுவலாம் எனவும் சிபார்சு செய்தார்.

### வேலணையிலும் புங்குடு தீவிலும் இரண்டு காரியாதிகாரி அலுவலகங்கள்

காரைநகரை வேறாகப் பிரிக்கும் கருத்து அரசாங்கத்துக்கு இன்மையாலும், காரைநகரையும் சேர்த்தால் புதிதாக இரண்டு காரியாதிகாரி அலுவலகங்கள் வேலணையிலும் புங்குடுதீவிலும் நிறுவும் வாய்ப்பு உறுதியாக உண்டென்பதை நன்கு அறிந்தமையாலும் நான் பின்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் சிபார்சுப்படி புதிய காரியாதிகாரி பிரிவுகளை வகுக்குமாறு அமைச்சரை வற்புறுத்தினேன். லைடன் தீவில் ஒரு காரியாதிகாரி அலுவலகத்தைத் தானும் இயங்காமற் செய்தற்குச்சில தரகர்கள் அப்பொழுதும் சூழ்ச்சி செய்தனர்.

அமைச்சரும் அரசாங்க அதிபரின் சிபார்சினை ஏற்று ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து, அமைச்சர் அவையின் அங்கிகாரத்தைப்பெற்று வேலணையிலும் அடுக்கப் புங்குடுதீவிலும் காரியாதிகாரி அலுவலகங்கள் நிறுவப்படும் என அறிவித்தார். இவ்வாறு நிறுவுவதை ஒரு வருடம் முந்தி நிறுவுமாறு அதாவது 1972இல் வேலணையிலும் 1973இல் புங்குடு தீவிலும் நிறுவுமாறு மீண்டும் நான் அமைச்சரைக் கேட்டேன். இது யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் நன்கு தெரியும்.

புதிய காரியாதிகாரி அலுவலகங்களை நிறுவுதல் அரசாங்க அதிபர் சிபார்சு செய்த முன்னீட்டு முறைப்படி நடைபெறும்என எனக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் போதிய பணம் கிடைத்தால் இந்த இரண்டு அலுவலகங்களையும் விரைவில் நிறுவுதலைக் கவனிப்பதாகவும் அமைச்சர் எனக்கு எழுத்தில் அறிவித்தார்.

இதன் பின்னரும் இந்தத் தரகர்கள் வேலணையில் மட்டுமே புதிய காரியாதிகாரி அலுவலகம் நிறுவப்படும். புங்குடுதீவை ஊர்காவற்றுறைப் பா. உ. புறக்கணித்து விட்டார் என்று நச்சுப்பிரசாரம் செய்தனர். ஒரு பத்திரிகையினையும் தங்கள் பிரசாரத்துக்கு நன்கு பயன்படுத்தனர்.

### பெயர்ப்பிரச்சினை

புங்குடுதீவிலும் ஒரு காரியாதிகாரி பிரிவு நிறுவப்படவிருப்பதால் தீவுப்பகுதி வடக்குக் காரியாதிகாரி பிரிவுக்கு ஊர்காவற்றுறைக் காரியாதிகாரிபிரிவு எனவும் தீவுப்பகுதி தெற்குக் காரியாதிகாரி பிரிவுக்குவேலணைக் காரியாதிகாரி பிரிவு எனவும் பெயரிடுமாறு நான் மாண்புமிகு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைக் கேட்டேன்.

இந்த விடயத்தை யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில முடிவு செய்யுமாறு அமைச்சர் அரசாங்க அதிபரைப் பணித்தார். இந்த விடயம் 30-1-73ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நான் மட்டுமன்றி, அரசாங்க அதிபரும் புங்குடுதீவிலும் காரியாதிகாரி அலுவலகம் நிறுவப்படும் என்பதைக் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிராமசபைத் தலைவர்கள் மாவட்ட உயர் அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட 87 பேர் சமூகம் கொடுத்தனர். இவர்கள் எல்லோருக்கும் காரியாதிகாரி அலுவலகம் வேலணையிலும் புங்குடுதீவிலும் நிறுவப்படும் என்பது நன்கு தெரியும்.

### தரகர்களின் நச்சுப்பிரசாரம்

மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்ற பின்னரும புங்குடுதீவிலும் காரியாதிகாரி அலுவலகம் நிறுவப்படும் என்பதைச் சுட்டிக் காட்டி நான் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டேன். இதற்கு முன்னரும் தரகர்களின் ஏமாற்று வித்தையையும் நச்சுப்பிரசாரத்தையும் முறியடிப்பதற்காகப் புங்குடுதீவில் நடைபெற்ற மூன்று பகிரங்கக் கூட்டங்களில் புங்குடுதீவிலும் காரியாதிகாரி அலுவலகம் நிறுவப்படும் என்பதை எடுத்துக்கூறினேன். இதை யாரேனும் மறுக்கமுடியுமா என்று இந்தத் தரகர்களுக்குப் பகிரங்கச் சவாலும் விட்டேன்.

இதன்பின்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேலணையில் 1-7-73இல் காரியாதிகாரி அலுவலகத்தை திறப்பதற்கு, கிராம

(7-ம் பக்கம் பார்க்க)

---

## பீட்டர் கெனமனும் திருச்செல்வமும்

1964ம் ஆண்டு உருவான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி — சமசமாஜக் கட்சி — கம்யூனிஸ்ட் கட்சி — ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கூட்டணிக்குள் மூடிமறைக்க முடியாத அளவு பெருத்த வெடிப்பு இப்போது ஏற்பட்டு விட்டது!

அரசாங்கத்தின் கொள்கைகளை சாடிவருவதால் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமசிங்காவையும், மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த இரு பா. உ. க்களையும் கூட்டணியிலிருந்து விலக்கிவிட்டதாக திருமதி சிறிமா பண்டாரநாயகா திட்டவட்டமாக அறிவித்து விட்டார்!

டாக்டர் விக்கிரமசிங்காதான் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்; அவர் கூட்டணியிலிருந்து வெளியேற்றப்பட்டாரென்றால் கம்யூனிஸ்ட் கட்சியே வெளியேற்றப்பட்டதாகத்தான் அர்த்தம்!

ஆனாலும்—தலை வெளியேற்றப்பட்டும் வால் மட்டும் உள்ளே ஒட்டிக்கொண்டிருக்கிறது!

ஆம்—அமைச்சர் பதவி மோகம் கண்ணை மறைப்பதால் போலும்—பதவியை உதறியெறிந்து அரசாங்கத்திலிருந்து வெளியேறும்படி கட்சித் தலைமை இட்ட கட்டளையை காலால் உதைத்துத்தள்ளிவிட்டு—பதவியை விடாப்பிடியாகப் பிடித்தபடி இருக்கிறார் பீட்டர்கெனமன்!

கம்யூனிஸ்டுகளின் பதவிப் பித்தத்தைக் கண்டு நாடே இன்று கைகொட்டி நகைக்கிறது!

இதே வேளையில் இந்நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மற்றோர் சம்பவத்தை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்—

கம்யூனிஸ்ட் கட்சி—முக்கூட்டணியில் சேர்ந்தது போலவே—1965ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி சேர்ந்தது.

தமிழரசுக்கட்சிக்கும் யூ. என். பிக்குமிடையேயிருந்து வந்த இணக்கம் முறிந்து—தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது என்று தமிழரசுக் கட்சி முடிவு செய்த நேரத்தில்—கட்சிக் கட்டுப்பாட்டுக்கமைய, தமிழரசுக் கட்சியின் சார்பில் அமைச்சர் பதவியை ஏற்றிருந்த திரு. மு. திருச் செல்வம், தமது பதவியைத் தூக்கியெறிந்து அரசாங்கத்திலிருந்து வெளியேறினர்!

ஏனெனில் தமிழரசுக்கட்சியினர் இலட்சியவாதிகள்—கொள்கைவாதிகள் — கட்டுப்பாட்டைக் கண்ணெனப் போற்றுவோர்!

கம்யூனிஸ்ட் கட்சிக்கு கட்டுப்பாடுமில்லை—கொள்கையுமில்லை சந்தர்ப்பவாதம் மட்டுமே இன்று எஞ்சியிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமறுப்பு இயக்கம்; கூட்டணிக்கு சில ஆலோசனை!

சட்டமறுப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதெனத் தமிழர்கூட்டணி எடுத்த முடிவு, விடுதலை விரும்பிகளின் நெஞ்சங்களிலே வீர உணர்வையும், வேகத்தையும் விறுவிறுப்பையும் ஏற்படுத்தியுள்ள இந்த வேளையிலே—

களம் காணும் துடிப்புடன் கணக்கற்ற காளையர், 'அருமைத் தலைவர்களே! ஆணையிடுங்கள்; அதன்வழி நடப்போம்; எடுத்ததை முடிப்போம்; உயிரைக் கொடுத்தும் உரிமையைக் காப்போம்' என்றெல்லாம் வீரக்குரல் எழுப்புகின்ற இந்த வேளையிலே—

'ஈழத் தமிழரின் இன்னல் நீங்கவேண்டும்: ஆண்ட தமிழினம் மீண்டும் இனி என்றும் ஆண்டிடவே வேண்டும்' என உலகத் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் தம் தார்மீக ஆதரவையும் ஆவலையும் ஆர்வத்தையும்பகிரங்கப்படுத்துகின்ற இந்த வேளையிலே—

தமிழர் கூட்டணித் தலைவர்களுக்குச் சில ஆலோசனைகளைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

1. நீங்கள் தீட்டும் திட்டங்கள் நல்லவையாக-பயன் நிறைந்தவையாக- அப்பழுக்கற்றவையாக — தூய்மையானவையாக — எஃகு போன்ற உறுதியும் உரமும் படைத்தவையாக— எவ்வித உடைசலும் இல்லாதவையாக—இருத்தல் வேண்டும்.

2. திட்டங்கள் அனைத்தையுமே பகிரங்கப்படுத்தும்படி நாம் கேட்கவில்லை. அப்படிப் பகிரங்கப்படுத்துவது, சில சமயம் பாதகமாகவும் அமையலாம். ஆனால், உங்களுடைய திட்டங்கள் பூரணமானவையாக இருக்கவேண்டும். தமிழினத்தின் உரிமைகளைப் பெறும்வரை என்னென்ன நடவடிக்கைகளை எடுப்பது? அவற்றை எப்படி நடைமுறைப்படுத்துவது? ஆட்சியாளர் அலட்சியப்படுத்தினால், என்ன செய்வது? அவர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டால் என்ன செய்வது? ஆட்சியாளரின் அடிவருடிகளின் - ஐந்தாம் படையினரின் - 'விஷமத் தனங்களை' எவ்வாறு எதிர்கொள்வது?— போன்ற விஷயங்களை அலசி ஆராய்ந்து, இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்கக்கூடிய பூரணமான திட்டங்களாக இருக்க வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைகளையொட்டி, உரிமைப் போரை நிறுத்தவேண்டி ஏற்படலாம். ஆனால், இறுதி வெற்றிவரைக்குமான திட்டங்கள் —பூரணமானவையாக—உங்களிடம் இருக்கவேண்டும்.

3. தொண்டர்களைத் திரட்டுவதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். உண்மையான இன உணர்ச்சியின்றிப் பேருக்கும் புகழுக்கும், பேராசைப்பட்டு முன்வரிசையில் நின்று 'போட்டோ'வுக்குப் போஸ் கொடுப்பதற்காக வருபவர்களை—பதவியையும் பணத்தையும் கண்டவுடன் பல்லிளிப்பவர்களை-வெற்றுத் துப்பாக்கிகளைப் பார்த்தவுடன் 'வெடவெடெ'ன்று நடுங்குபவர்களை— ஆட்சியாளர்களின் கீழ்த்தரமான அடக்குமுறையைக் கண்டு, பொறுமை இழந்து, அன்பையும் அஹிம்சையையும் அறத்தையும் மறந்து, வன் செயல்வீரராக மாறக்கூடியவர்களை— தயவுசெய்து தவிர்த்துவிடுங்கள்.

4. சர்வ வல்லமை படைத்த—சர்வாதிகாரப் போக்குடைய ஆட்சியாளருக்கு எதிராக நடைபெறப் போகின்ற அறப்போராட்டம் இது. அறப்போருக்கு மாசு கற்பிப்பதற்கு—எதிர்ப் பிரசுரம் செய்வதற்கு ஆட்சியாளர் முயலலாம். அரசின் கையில் வானொலி இருக்கின்றது; ஏறிக்கரைப் பத்திரிகைகள் இருக்கின்றன; அரசு கேட்காமலே, குணசேன கோஷ்டியின் பத்திரிகைகள் அனைத்தும் இவ்விஷயத்தில் அரசுக்கே தாளம் போடும்; ஏனைய பத்திரிகைகளும் அரசை எதிர்த்து, உரிமைப் போரை ஆதரிக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை; அறப்போரை ஆதரிக்கின்ற ஒரே ஒரு பத்திரிகை 'சுதந்திரன்' மட்டுமே. நீங்கள் அனைவரும் 'சுதந்திரன்' பத்திரிகையைச் சரியான முறையிற் பயன்படுத்தவேண்டும். உங்கள் எண்ணங்களை-இலட்சியங்களை— கட்டுரையாக— அறிக்கையாக வெளியிட வேண்டும். எதிரிகளின் விஷமப்பிரசாரங்களை மறுத்து-எதிர்த்து—சுடச்சுடப் பதில் கொடுக்கவேண்டும்.

5. இறுதியானதும் மிக முக்கியமானதும் ஒன்றுண்டு. தமிழ் மக்களைப் பற்றியும் தமிழர் கூட்டணி பற்றியும் சிங்கள மக்கள் மத்தியிற் செய்யப்பட்டுவரும் தவறான பிரசாரத்திற்கும் தகுந்த பதில் கொடுக்கவேண்டும். இந்த அறப்போர் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டம் அல்ல என்பதை—தமிழர்கள், தாம் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக ஆட்சியாளரின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் அஹிம்சை நடவடிக்கை என்பதை — தமிழர்கள் இந்த நாட்டில் உரிமையுடன் வாழ்வதா அல்லது உரிமையின்றிப் படிப்படியாக மாள்வதா என்பதைத் தீர்மானிக்கவிருக்கும் அன்புப் போர் என்பதை சிங்கள மக்களை அடிமைகளாக்குவதோ, அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துவதோ, அவர்களை அழித்தொழிப்பதோ தமிழர் கூட்டணியின் நோக்கமல்ல என்பதை—தெளிவாகவும் விரிவாகவும்—சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். சிங்களமொழியில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவதன்மூலம், இதைச் சாதிக்கலாம்.

இவற்றையெல்லாம் கவனத்திலெடுத்து — பரிசீலனை செய்து — இவற்றிற்கேற்பத் திட்டங்களை வகுத்துச்செயற்பட்டால், எந்தச் சக்தியாலும், அறப்போரின் வெற்றியைத் தடுக்கமுடியாது என்பது சர்வ நிச்சயம்.

—மூவேந்தன்

# தமிழினம் இருக்கும்வரை தொண்டமான் யுகம் அழியாது!

'தொண்டமான் போன்றவர்களின் தேயிலைத் தோட்டங்களை இவ்வரசு வகுப்புவாத கொள்கையோடு சுவிகரித்துவிட்டாலும் இந்நாட்டில் தமிழ் பேசும் இனம் இருக்கும் வரை தொண்டமான் யுகம் அழிந்து போவதில்லை'—இவ்வாறு 26-8-73 இராகலை கழகப் பணி மனையில் நடைபெற்ற மாவட்டக் குழுத் தேர்தல் கூட்டத்தில் துணைத் தலைவர் திரு. நா. அ. சின்னத்தம்பி கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: இன்று மலைநாட்டில் வாழும் இந்திய தோட்டத் தொழிலாளர்களே இந்நாட்டை உருவாக்கியவர்கள் என்பதை மறந்து அவர்களை இங்கே இருந்து விரட்டியடிக்க இந்த ஐக்கிய முன்னணி அரசு மனப்பால் குடித்தாலும், அவர்களின் சேவையை இன்றைய அரசியல் வாதிகள் ஒரு நாளும் மறக்க முடியாது. இந்த இனத்தின் சரித்திரம் என்றென்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். இந்நிலையில் ஒதுக்கப்பட்ட இனமாக இன்று தமிழர்கள் ஒன்றுபடாது நாளுக்கு நாள் குரங்குகள் போல் மரத்துக்கு மரம் தாவித்திரிவதில் பிரயோசனம் ஏற்பட்டதா?

இன்று இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து வம்சாவழி பிரஜாவுரிமை பெற்றவர்கள் கூட இந்தியத் தமிழர்கள் என்று வர்ணிக்கப்படுகின்றார்கள். இப்படியே நாளுக்கு நாள் தங்கள் உரிமைகளை தமிழர்கள் இழந்து கொண்டிருப்பது சாபக்கேடானது. இதனையறிந்தும் மலைநாட்டில் வாழும் தமிழ் பேசும் தோட்டத்தொழிலாளர்கள் சமசமாஜக் கட்சியின் கீழ் இயங்கும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனையும் ஸ்ரீலங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனையும், பின்பற்றி திரிவதில் நன்மையுண்டா? இதனை இவர்கள் உணர்வார்களா? தமிழ் பேசும் மக்களை இன்று உங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஜீவாதாரப் பிரச்சினைகளை வென்றெடுக்க நாம் தமிழர் என்ற ஓரணியில் திரளவேண்டும் இதுவே இன்று தமிழ் பேசும் மக்கள் முதலில் செய்ய வேண்டும் என்றார்.

மற்றும், மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன், துணை பிரதிநிதி எம். நடராஜமூர்த்தி, மாவட்டத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

மாவட்டக் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் வருமாறு:-

மாவட்டத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம், துணைத் தலைவர் திரு. பி. காந்தி, மாவட்டச் செயலாளர் திரு. எம். ஆர். கே. காளிமுத்து, துணைமாட்டச் செயலாளர் திரு. ஆ. இராமையா பொருளாளர் திரு. ஆர். பி. வேலு.

# அரியநாயகன்—தமிழின் நாயகன்

அறப்போரணித் தலைவர் அரியநாயகம் மறைந்துவிட்டாராம்!

சிங்கள ஆட்சியை கிடுகிடுத்திடவைத்திடும் 'அறம்' எனும் ஆயுதத்தைக் கையிலேந்தி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் ஈழத்தின் அரசியல் வானில் உலவி வந்த அந்தத் தன்மானத் தமிழ்ச் சிங்கம் மறைந்து விட்டதாம்!

விடுதலை உணர்வு உள்ளத்தில் கொந்தளித்திட— அத்தகைய வீர உணர்வை தமிழ் ஈழத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விதைத்து வளர்த்திட்ட தமிழரசுக்கட்சியின் விசுவாசமிக்க உண்மையான ஊழியர் அவர்!

அவருடைய பேச்சும், மூச்சும், செயலும், தமிழ் இனத்தின் விடுதலை பற்றியதாகவேயிருந்தது!

தாடியை உருவி விட்டுக் கொண்டே தமிழின விடுதலைப் போராட்டத்துக்காக அவர் உருவாக்கிய திட்டங்கள் பலப்பல!

தம்பிலுவில்—திருக்கோவில் மக்களை தந்தை செல்வாவின் விடுதலை அணியின் முன்னேடும் வீரர்களாக உருவாக்கி வைத்திருப்பவர் அவர்!

மட்டுநகர் முதல்வர் செந்தமிழ்ச் செல்வர் இராசதுரையின் வலதுகரமாக இருந்து இயக்கத்தை கிழக்கில் வளர்த்த தளகர்த்தர் அவர்!

அரியநாயகம் மீது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கு இருந்த ஈடுபாடு—பற்றுப்பாசம் ஏராளம்!

அரியநாயகம் மறைந்த செய்தி கேட்டு உணர்ச்சிக் கவிஞர் சிறையினுள்ளே எப்படித்துடித்தாரோ — கதறியழுதாரோ?

சிறைச்சாலைத் துன்பங்களை சிந்தை மகிழ்வுடன் பலதடவைகளில் ஏற்றுக்கொண்ட அன்பர் அரியநாயகம்—அதனைக் கண்டு எந்த கட்டத்திலும் அஞ்சி ஒதுங்காதவர்!

தமது வாழ்வில் வசந்தத்தை அவர் நாடியதில்லை; ஈழத் தமிழ் நாட்டின் விடுதலை வாழ்வையே அவர் நேசித்தார்.

அவர் தமிழை நேசித்தார் — தமிழ் மக்களை— நேசித்தார்—தமிழ் ஈழத்தை நேசித்தார்!

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்பது அரியநாயகம் பின்பற்றி வந்த அரசியல் நெறி முறையாகும்!

கட்சித் தலைமை தவறான வழியிற் செல்லும்போது— சிறிதுகூட தயவு தாட்சண்யமின்றி அதைக் கண்டிக்கத் தயங்காதவர் அரியநாயகம்!

சில மாதங்களுக்கு முன்னர் அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். தனக்கு எழுத முடியாத நிலையிலும் தனது புத்திரியைக் கொண்டு அந்தக் கடிதத்தை எழுதுவித்திருந்தார்.

அந்தக் கடிதம் அவரது இயக்கப்பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு!

— நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலேயே [illegible] போதும் அவரது சிந்தனை இயக்கத்தைச் சுற்றி— தமிழ் இனத்தைச் சுற்றியே ஓடிக்கொண்டிருந்தது. இதோ அந்தக் கடிதத்தின் ஒரு பகுதி:-

கடந்துபோன இரண்டரைத்திங்களாய் நமது இயக்கத்தின் செயல்முறைகளை அறிந்துகொள்ள முடியாமலிருந்து வந்தேன். இரண்டொரு நாட்களாய் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், சவால்களும், எதிர்ச் சவால்களும் நிறைந்த (பி. ஆர். செல்வநாயகத்தின்) கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களை கேள்வியுற்று இவ்வேளை பூரண பலத்துடன் இல்லாமல் இருக்கிறேனே யென்று வேதனையுற்றேன்.

'வடக்கிலும், கிழக்கிலும் சுதந்திர விரோதிகள் செய்து வரும் தகடதத்தங்கள் முறியடிக்கப்பட வேண்டிய இந்த வேளையில் நான் என்பங்கை நிறைவேற்ற துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறேன்.

'தலைவர்களும் தொண்டர்களும் நண்பர்களும் என் கண் முன்னே இருக்கின்றார்கள். நான் தனித்து நிற்பது மன வேதனையை ஊட்டுகின்றது. சேர்ந்து செயல்பட இறைவனை எனக்காக வேண்டுதல் செய்யும்படி அன்புடன் பணிக்கிறேன்.'

இவ்வாறு உருக்கமுடன் எழுதியிருந்த அன்பர் அரியநாயகம், இன்று எம்மைத் தனித்து விட்டு — தவிக்க விட்டு அவர் மட்டும் தனியே பறந்து விட்டார்!

அவர் இறந்து விட்டார் என்று கூறப்படுவதை [illegible]

அவர் நம் இதயங்களில் எல்லாம் வாழும்போது இறந்து விட்டார் என்று எப்படிக் கூறமுடியும்?

தமிழ் ஈழத்தின் விடுதலையைக் காணத்துடித்த அவரது உயிர் தமிழ் ஈழத்தையே சுற்றிக்கொண்டிருக்கும்!

விடுதலைக்குப் போராடும் இளைய சமுதாயத்துக்கு அது வேகம்கொடுத்துக் கொண்டேயிருக்கும்!

'எங்கள் ஈழத் தமிழ் நாடு, என்று சிறைச்சாலையில் அவர் எழுதிய இன எழுச்சிக் கீதம் தமிழர் கூட்டங்களில் பாடப்படும் போதெல்லாம் நான் அரியநாயகத்தையே காண்கிறேன்!

அண்மையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநில மாநாட்டின் தொடக்கத்தின் போது— திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் வாயிலிருந்து 'எங்கள் ஈழத் தமிழ் நாடு' எனும் எழுச்சிக் கீதம் புறப்பட்ட போது — அன்பர் அரியநாயகத்தையே அங்கு கண்டேன்!

ஆம்—அரியநாயகம் மறையவில்லை—வாழ்கிறார் வாழ்ந்து கொண்டேயிருப்பார்!

தமிழ் விடுதலை வீரர்களின் உள்ளங்களில்— தமிழ்த்தேசிய உணர்வின் வடிவத்தில் அவர் வாழ்ந்து கொண்டேயிருப்பார்!

அரியநாயகம் கண்ட கனவு சுதந்திரத் தமிழ் ஈழம்! அந்த இலட்சியம் வெற்றிபெற உழைப்பதே அன்னாருக்கு நாம் செய்கின்ற அஞ்சலியாகும்!

— கோவை.

காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சிறையில் இன்று
**479-வது நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் வாழ்க்கை இன அழிவுக்கே வழிவகுக்கும்

# விடுதலைக்குப் போராடி வீர சுதந்திரம் பெறுவோம்!

## தமிழ்ஈழ விடுதலைப்போர் வெற்றிபெற

### அண்ணா, காந்தி, முஜிபுர் வழிகளைப் பின்பற்றுவோம்!

தமிழரசுக் கட்சியின் 12வது தேசிய மாநாட்டில் கட்சியின் புதிய தலைவரா திரு. அ. அமிர்தலிங்கம் ஆற்றிய தலைமைப் பேருரையின் முதலிரு பகுதிகள் கடந்த இரு வாரங்களாக சுதந்திரனில் வெளியிடப்பட்டது. இறுதிப் பகுதி இங்கு இடம் பெறுகிறது.

ஒன்று, இன்றைய நிலையை ஏற்றுக்கொண்டு, சிங்கள மொழியைக் கற்று, பௌத்த மதத்துக்குத் தலைவணங்கி, தனிப்பட்ட ஒரு சிலருக்குத் தரப்படும் அற்ப சலுகைகளுக்காக ஆட்சியாளருக்கு ஆலவட்டம் பிடித்து, ஏற்றமின்றி வாழும் எச்சில் வாழ்க்கை. கெட்ட நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று பாரதி கூறிய வாழ்க்கை. இந்தவாழ்க்கைஒருசிலருக்குப் பதவி பெறவும், அற்ப நன்மைகளைப் பெறவும், உதவினாலும், இனத்திற்கு நலிவையும், அழிவையுமே தரும்.

பொருளாதார நெருக்கடி மோசமாக அதன் பழு அடிமை இனத்தையே அதிகமாகத் தாக்கும். மூலதனமில்லை என்று ஆட்சியாளர் முதலில் நிறுத்தியது தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள அபிவிருத்தித் திட்டங்களையே.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தித்திட்டமும், கச்சாய்உப்பளத் திட்டமும், அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டையும், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகமும் அடைந்த கதி இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

அரசாங்கத்தின் தேசியமயக்கொள்கைவேலைவாய்ப்பைப் பொறுத்தவரை சிங்களமயக் கொள்கையாகவே நடைபெற்று வருகின்றது என்பதற்குத் துறைமுகத் தேசியமயம், போக்குவரத்துச் சபை, அரசாங்கம் பொறுப்பேற்ற தோட்டங்கள் போன்றவற்றில் தமிழருக்கு வேலைவாய்ப்பு அருகி வருவது சான்று பகருகின்றது. அரசாங்கத்தின் கைப்பாவை ஆக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு இயக்கமும், வர்த்தகத் தேசியமயமும் தென்னிலங்கையில் வர்த்தகத் துறையில் — ஈடுபட்டிருக்கும் தமிழரை அங்கிருந்து அகற்றும் வழியாகவே மாறிவருகின்றன. தனியார் கைத்தொழில் ஆரம்பிப்பதற்கும் அரசாங்க அனுமதியும் மூலப்பொருட் கோட்டாவும் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கிடைப்பதில்லை. தேசியமயக் கொள்கையால் வேலை இழந்த தமிழ்த் தொழிலாளர் காடுவெட்டி விவசாயம் செய்யவும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்பு எம் வாலிபருக்கு முயற்கொம்பு. உயர் கல்வி பெறுவதற்குத்தானும் தகுதியின்படி வாய்ப்பின்றி தரப்படுத்தல் என்ற கொடுவாள் குறுக்கே வந்து நிற்கின்றது. எமது உரிமைகள் அழிக்கப்படுவது மாத்திரமல்ல, எமது மதங்கள் தாழ்த்தப்படுவது மாத்திரமல்ல, எமது தொழில், கல்வி வசதிகளும் பொருளாதார வாழ்வுமே இன்றைய ஆட்சிமுறையை ஏற்று வாழ்வதினால் சிதைந்து போகின்றன. விரக்தி மனப்பான்மைக்கு இடங்கொடுத்து நாட்டைவிட்டு ஓடுகின்றனர் சிலர். நிலவிற்கு ஒளித்துப் பரதேசம் போவதா என்பது எமது நாட்டுப் பழமொழி. இவ்வழி எம்நோய்க்கு மருந்தாகாது.

நண்பர்களே,

நம்முன் ஒரேஒருவழிதான் உண்டு. வீரசமுதாயத்துக்கு ஏற்ற வழி மாத்திரமல்ல, பூச்சி, புழுக்களாக வாழாது மனிதராக வாழ விரும்பும் எந்த சமுதாயத்துக்கும் ஏற்ற வழி அதுதான். தன் கொள்கைக்காகஒன்றேகால் ஆண்டுகளாக வெலிக்கடை சிறையில் வாடும் தமிழ்க் கவிஞன் காசி ஆனந்தன் பாடியதுபோல "ஆண்ட பரம்பரை மீண்டும் ஓர்முறை ஆள நினைப்பது!" தான் அந்த வழி. முன் பல்வேறு பாதைகளிற் சென்ற தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் இன்று ஒன்றுபட்டு தமிழர் கூட்டணி மூலம் காட்டும் வழி அதுதான். சிங்களச் சமுதாயத்தின் சம்மதத்தோடு எமது உரிமைகளை நிலைநாட்டமுடியாதென்பது தெரிந்துவிட்டபின்பு, ஒரு தனித் தேசிய இனத்தின் மறுக்க முடியாத உரிமையான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தன் பாரம்பரிய தாயகத்தில் தமிழினம் தன் ஆட்சி காண்பது தான் அந்தவழி.

ஐரோப்பியர் இந்நாட்டில் கால் வைக்குமுன் எம் முன்னோர் தம் உரிமையை நிலைநாட்ட, தமிழில் ஆட்சி செய்ய, தமது மதத்தை வளர்க்க, தமது வைத்திய முறையை வளர்க்க, தம் கலை கலாச்சாரத்தைக் கட்டிக்காக்க, தம்பொருள் வளத்தைப் பெருக்க சிங்கள மக்களின் சம்மதத்தை நாடி நிற்கவில்லை. தம் காலில் நின்றார்கள். தம் உழைப்பில் வாழ்ந்தார்கள். தம்மைத் தாமே ஆண்டார்கள். அதே வழியில் எமது உரிமையை நிலைநாட்ட எமக்குள்ள மார்க்கம் என்ன?

#### அடையும் மார்க்கம்

இன்றைய ஆட்சியில் எமக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதை, இனத்திற்குப் பாரதூரமான அநீதி இழைக்கப்படுகிறது என்பதை எம் மக்களிற் பெரும்பாலோர் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால் இந்நிலையை மாற்ற எம்மால் என்ன செய்ய முடியும் என்று கேட்கின்றனர்.

நாம் கைக்கொள்ளவேண்டிய முதல் ஆயுதம் அநியாயத்தோடு ஒத்துழைக்க மறுத்தல். அண்ணல் காந்தி இந்திய சுதந்திரப் போரில் ஒத்துழையாமை, சாத்வீக சட்டமறுப்பு என்ற இரண்டு ஆயுதங்களையே கையாண்டார். ஏறத்தாழ நானூறு ஆண்டு அந்நிய ஆட்சியின் கீழ் நிராயுத பாணிகளாக்கப்பட்டு, அரசாங்கத்தின்படை பலத்தை எதிர்க்கும் வழி என்ன என்று ஏங்கும் மக்களுக்கு இவ் இருபதாம் நூற்றாண்டில் காந்தியடிகள் கொடுத்து ஆயுதம் அகிம்சையே.

வங்காளதேச விடுதலைப் போரின் ஆரம்பத்தில் வங்கத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆட்சியாளரோடு ஒத்துழையாமை என்ற ஆயுதத்தையே உபயோகிக்கும்படி வங்கமக்களைக் கேட்டார். சாதாரண மக்கள் முதல் நாட்டின் பிரதம நீதிபதி வரை அவர் கேள்விக்கிணைந்து யாஹ்யாகான் ஆட்சியோடு ஒத்துழைக்க மறுத்தனர். புதிய ஆளுனர் திக்காகானைச் சத்தியப் பிரமாணம் செய்து வைக்கவே மறுத்தார் வங்கப் பிரதம நீதிபதி. வங்க மக்களின் ஒற்றுமையான ஒத்துழையாமையே வங்க விடுதலையின் அத்திவாரம். அதன்பின் வந்தமையே இந்திய உதவியும், வெளிநாடுகளின் அனுதாபமும்.

அதே வழியில் இன்றைய ஆட்சியோடு ஒத்துழைக்க மறுத்து, பவனிவரும் அமைச்சர்களுக்கு ஆலவட்டம் பிடித்து, மாலைபோட்டுமடிப் பிச்சை எடுக்கும் மனப்பான்மையை விட்டொழித்து, எம் மக்கள் ஏகோபித்து எதிர்க்கும் எண்ணத்தை வளர்க்க வேண்டும். எம் மத்தியில் உள்ள துரோகிகளைப் பகிஷ்கரித்து ஒதுக்கவேண்டும். தெரிவு செய்யப்பட்ட சட்டங்களைக் கட்டுப்பாடாக மீறி, அகிம்சை நெறியில் இருந்து வழுவாது, ஆயிரக்கணக்கில் சிறை செல்வோம்.

எமக்கு இன்று தேவை புரட்சிமனப்பான்மை, ஆயுதபலமற்ற மக்கள் ஆட்சியாளரின் படைபலத்தை எதிர்க்க வழி அகிம்சைப் புரட்சியே. ஆயுதப் புரட்சி என்பது ஒரு சிலரின் இயக்கமாக, ஒரு சிலரை அதிகாரத்தில் அமர்த்தும் வழியாகவே உலகெங்கும் பயன்பட்டிருக்கின்றது. எல்லா மக்களும் பங்குபற்றும் புரட்சி, ஒதுக்கப்பட்ட மக்களின் புரட்சி, சாத்வீகப் புரட்சியே என்று "ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி என்ற நூலில் பிரேசில் நாட்டுப் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார். இக் கூற்று எமது நிலைக்கு மிகவும் பொருத்தமானது இன்றைய சூழ்நிலையில் எமக்கு வேறு வழிஇல்லை என்பதை இளைஞர் நன்கு உணரவேண்டும்.

அண்ணா கூறியபடிகடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து, அண்ணல் காந்தியின் வழியில் ஒத்துழையாமை சட்ட மறுப்பு என்ற ஆயுதங்களைத் தாங்கி வங்கத்தலைவர் முஜிபுர் ரஹ்மான் ஏற்படுத்தியது போன்ற ஒற்றுமையையும் ஏற்படுத்துவோமானால் வங்கம் விடுதலை பெற்றது போன்று இங்கும் உரிமை பெறமுடியும் என்பது உறுதி.

#### சாதிப் பிரிவினை

இன ஒற்றுமை முதல் தேவை — ஒரு சில சுயநலமிகளைத்தவிர அரசியற் கட்சிகளில் இன்று ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது. அது பெரிய முன்னேற்றமாகும். அந்த ஒற்றுமை மக்கள் முழுப்பேரையும் ஆட்கொள்ள வேண்டும். சாதிப்பிரிவினை தமிழினத்தின் சாபக்கேடாக இன்னும் இருக்கின்றது. சாதியினால் உயர்வு தாழ்வு காட்டும நிலை இன்னும சில துறைகளில் நிலவுகின்றது. வழிபடும் இடங்கள், பொது நிலயங்கள், உணவுச் சாலைகள் ஆகியவற்றில் வேற்றுமை பாராட்டும் நிலை மறைய வேண்டும். சாதியின் பேரால் தமிழனைத் தமிழன் தாக்கும் நிலை, கொலை செய்யும் நிலை கூட யாழ் நகர் போன்ற இடங்களில் ஏற்பட்டதைக் கண்டோம். சாதி என்ற பெயரையே அறியாத ஓர் இன சந்ததியை நாம் உருவாக்கவேண்டும். தமிழினம் என்ற உணர்வைத் தவிர வேறு எந்தப் பிரிவினைக்கும் இடம் அளிக்காத இளைஞர் சமுதாயம் ஒன்று உருவாகி வருகிறது. அந்த இளைஞர் சமுதாயம் எம் இனத்தை வாழவைக்கும் என்பதே என் நம்பிக்கை.

#### உத்தியோக மோகம்

தனிப்பட்ட எம் வாழ்வை அமைப்பதிலும் ஒரு புதிய கண்ணோட்டம் எமக்கு ஏற்படவேண்டும். ஆங்கில ஏகாதிபத்தியம் எம் மத்தியில் பரப்பிய ஒரு வியாதி அரசாங்க உத்தியோக மோகம். இன்று பல இளைஞர்கள் அதிலிருந்து விடுபட்டு விவசாயத்தை நாடி நின்றாலும் இன்னும் அதே நிலையான

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு மாநாட்டில் நிறைவேறிய அரசியல் தீர்மானம்

12-9-73ல் மல்லாகத்தில் நடைபெற்றதமிழரசுக்கட்சியின் 12-வது மாநிலமாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுப் பெருமை பெற்ற அரசியல் தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

தமிழ் தேசிய இனத்தின் சுயாதீனத்துக்கும், சுயமரியாதைக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும், பாதகமானவகையில், ஒரு புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்நாடு குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்ட நேரத்தில் இனத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை ஒன்றுபட்டு எதிர்க்கும்நோக்கத்தோடு 1972மே 14ம் திகதி திருக்கோணமலையில் உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணியின் ஓர் அங்கமாக இலங்கைத்தமிழரசுக்கட்சி சேர்ந்து இயங்கி இதுவரை எடுத்துவந்தநடவடிக்கைகளை 1973ம் ஆண்டுசெப்டம்பர் 9ம் திகதி மல்லாகத்தில் கூடியிருக்கும் இ.த.அ.கட்சியின் 12வது தேசிய மாநாடு அங்கீகரிப்பதோடு இவ்வொற்றுமையை மேலும் வளர்க்கும் வகையில் கட்சி தொடர்ந்தும் செயற்படவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

மேலும் தமிழ்ப்பேசும் மக்களின் மொழி உரிமையையும் இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட தமிழ்ப்பேசும் மக்களின் பூரண குடியுரிமையையும் மதசமத்துவத்தையும், நீதிமன்றம் மூலம் நிலைநாட்டக்கூடிய அடிப்படை உரிமைகளையும் சாதி தீண்டாமை ஆகியவற்றை சட்டமூலம் ஒழிப்பதையும் உண்மை மக்களாட்சி வளரும் வகையில் அதிகாரத்தைப் பரவலாக்குவதையும் ஏற்றுக்கொள்ளும் வகையில், அரசியலமைப்புத் திருத்தப்படவேண்டுமென்றும், மூன்று மாத காலத்திற்குள் அரசியலமைப்பைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் தமிழினத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பெறுவதற்கு சாத்வீகப்போராட்டத்தில் இறங்குவதென்று தமிழர் கூட்டணி தீர்மானித்து அரசாங்கத்துக்கு அளித்த அவகாசத்தையும் அரசாங்கம் முற்றுப் புறக்கணித்து உதாசீனம் செய்துவிட்டபடியாலும், —

ஜனநாயக ரீதியில் இவ்வரசியலமைப்பை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதை உலகுக்கு காட்டும் பொருட்டும் இவ்வரசியலமைப்புக்கு தமிழ்மக்களிடையே ஆதரவு உண்டு என்ற தமது கூற்றைப் பரீட்சிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கத்துக்கு அளிக்கும்பொருட்டும், தமதுதேசியப்பேரவை உறுப்பினர் பதவியைத் திரு. செல்வநாயகம் துறந்துநூறாண்டாகியும் காங்கேசன்துறைத் தொகுதிக்கு இடைத்தேர்தலை நடத்தாது அத்தொகுதித் தமிழ் வாக்காளர்களுடைய அடிப்படை அரசியல் உரிமையை அரசு மறுத்துவிட்டதாலும், —

இந்நாட்டு பெரும்பான்மைத் தேசிய இனத்தின் ஒத்துழைப்போடோ, சம்மதத்தோடோ தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியமில்லை என்று கருதி தமிழ் தேசிய இனம் தமது பாரம்பரியமான தாயகத்தில் தமது சுயாட்சி உரிமைகளை நிலைநாட்டுவதே ஒரே வழியென்று தமிழர் கூட்டணி தீர்மானித்து அதன் அங்கமான பல்வேறு கட்சிகளின் பரிசீலனைக்கு அக்கருத்தை சமர்ப்பித்திருப்பதாலும் —

— இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாடு மொழியால், கலாச்சாரத்தால், வரலாற்றால், பிரதேசத்தால் ஒரு தனி இனமாக வாழ வேண்டுமென்ற உணர்ச்சி ஓர் தனித்தேசிய இனமாகக் கணிக்கப்படுவதற்கு பூரண தகுதிபெற்ற இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சர்வதேச நீதிக்கிணங்க ஏற்றுக் கொள்ளப்பட்ட 'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைத் தத்துவத்தின் படி தமது பாரம்பரியமான தாயகத்தில் இலங்கைத் தமிழ் தேசிய இனம் தன்னாட்சி காண்பதே எமக்குள்ள ஒரே வழி என்று இத்தால் தீர்மானிக்கிறது.

தமிழ் தேசிய இனத்தின் நியாய பூர்வமான இக்கோரிக்கைக்கு உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறும் வகையில் பிரசாரத்தை மேற்கொள்ளுவதென்றும், இவ்விலட்சியத்தை அடைவதற்கு தமிழர் கூட்டணி மேற்கொள்ளும் சாத்வீக அடிப்படையிலான நேரடி நடவடிக்கைகளுக் [illegible] அளிப்பதென்றும் இத்தேசிய மாநாடு தீர்மானிக்கிறது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் 10 நாட்கள் நடைபெற்ற உண்ணுவிரத போராட்ட விபரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தரங்கில் நாவலர் அமிர்தலிங்கம் பேசியதாவது:-

நாங்கள் அநாதைகள் அல்ல—உலகில் ஆறுகோடி தமிழர்கள் எங்களுக்கும் இருக்கிறார்கள். எங்களை அடக்கியொடுக்கி சிங்கள அரசு ஆள முயலுமானால் அந்தச் சகோதரர்கள் சும்மாபார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'நாங்கள் சிங்கள மக்களை ஆளவோ அவர்களது மொழி மத கலாசார உரிமைகளைப் பறிக்கவோ விரும்பவில்லை. அவர்கள் தங்கள் மொழியை மதத்தை பிரதேசத்தை—எப்படிப் பாதுகாக்க விரும்புகிறார்களோ அதே போலவேதான் நாமும் எமது மொழியை, மதத்தை, பிரதேசத்தைப் பாதுகாக்க விரும்புகிறோம்.

இந் நாட்டின் மீது சிங்கள மக்களுக்குள்ள உரிமை, பற்றுப் பாசம் அத்தனையும் எமக்கும் உண்டு. அந்த உரிமைகளை இழந்து அநாதைகளாக நாம் வாழ விரும்பவில்லை.

உலகிலுள்ள ஆறுகோடித் தமிழர்களும் எங்களுக்கு ஆயுதம் தரத் தேவையில்லை; குண்டுகள் தரத் தேவையில்லை; அவர்களது தார்மீக ஆதரவே எங்களை வெற்றிப் பாதைக்கு கொண்டுசென்று எமது சுதந்திரத்தைப் பெற வழி வகுக்கும்.

திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கூறியதாவது;-

ஈழத்தமிழினத்தின் பிரச்சினை இன்று ஒரு சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது. உலகம் எமது பிரச்சினையை உணர்ந்துவிட்டது.

பல நூறு வருடங்களாக இந்நாட்டில் தனியரசு செலுத்தி வந்திருக்கிறது என்பதை வரலாறு எடுத்துக் கூறுகிறது. 1833ம் ஆண்டுக்குப் பின்னர்தான் ஈழத் தமிழ் நாடும்,சிங்கள நாடும் அந்நியரால் ஒன்றாக இணைக்கப்பட்டது. இழந்த அந்தத் தமிழ் நாட்டை மீண்டும் நிர்மாணிக்கவே நாம் போராடி வருகிறோம்.

தமிழர்களது வரலாற்றில் வீரத்துக்கும் பலாத்காரத்துக்கும நிரம்பிய இடம் இருந்து வந்தது உண்மை. ஆனால் இன்றைய நிலையில் பலாத்காரத்தைப் பிரயோகிக்கக் கூடிய நிலையில் தமிழினம் இல்லை எனவே அஹிம்சைப் போராட்டத்தின் மூலமே நாம் நமது இலட்சியத்தையடையவேண்டும்.

எங்களுக்குப் பகைவர் என்று ஒருவரும் இல்லை, தமிழினத்துக்கு எதிராக தவறு செய்பவர்களே உண்டு. அந்தத் தவறு செய்பவர்களையெல்லாம் திருத்த எமக்குள்ள ஒரே வழி சாத்வீகப் போராட்டமே. அதற்கு முதற்படியே இளைஞர்களின் இந்த உண்ணாவிரதம்.

மேற்படி கருத்தரங்கில் திரு. வி. தருமலிங்கம், பா. உ., திருமதி. அமிர்தலிங்கம் திரு. ஹென்றி ஆசீர்வாதம் நேசையா உட்பட பலர் பேசினர்.

### 7வது நாள் போராட்டம்

தமிழ் இளைஞர் பேரவையின் 7வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் கோப்பாய் தொகுதியிலுள்ள புத்தூரில், தமிழர் கூட்டணியின் சட்டமறுப்பு பாடசாலையாகிய திருமுகன் பாடசாலை மைதானத்தில் தேசிய கீதம் கருத்தரங்கு இவற்றுடன் 17-9-73 மாலை 6 மணிக்கு தொடங்கி 18-9-73 மாலை 6 மணிக்கு நிறைவேறியது.

### 8 வது நாள் போராட்டம்

எட்டாவது நாள் உண்ணாவிரதப் போராட்டம் கோப்பாய்தொகுதியிலுள்ள உரும்பராயில் பிள்ளையார் கோவில் முன்றலில் 18-9-73 மாலை 6 மணிக்குஆரபம்மாகி 19-9 73 மாலை 6 மணிக்கு கருத்தரங்குடன் முடிவு பெற்றது. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

### 9வது நாள் போராட்டம்

9வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் 19-9-73 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள வேலணை முருகன் கோவிலுக்கு முன்பு ஆரம்பமாகி,20-9-73 மாலை 6 மணிக்கு நிறைவு பெற்றது பண்டிதர் இரத்தினம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஏராளமான மக்கள் பங்குபற்றினர்.

### 10வது நாள் போராட்டம்

10வது நாள் உண்ணாவிரதப் போராட்டம், 20-9-73 வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பெருங்காடு கந்தசாமி கோவிலடியில் ஆரம்பமாகி, 21.9-73 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நிறைவெய்தியது.

ஒவ்வொரு நாள் உண்ணாவிரதத்திலும் இருபது தொடக்கம் இருபத்தைந்து இளைஞர்கள் வரை பங்குபற்றி வருகிறார்கள்.

## சோசலிசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய அத்தாட்சியில்லாதிருப்பவர்கள்; 1954ம் ஆண்டு நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்திற்கு முந்திய இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்கள்; இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்து அது நிராகரிக்கப்பட்டவர்கள்; ஆகியோரே வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் அனேகர் என்று தெரியவந்துள்ளது.

25 ஆண்டுகளாக வேலை பார்த்து வரும் தமிழ்த் தொழிலாளர்களை பிரஜாவுரிமையை நிரூபிக்கவில்லையென்று காரணம் காட்டி வெளியேற்றிவிட்டு அந்த இடங்களை சிங்களவர்களுக்கு அளிப்பதுதான் அரசாங்கத்தின் சமதர்மக் கொள்கையா என்று கொதிப்புடன் கேட்கின்றனர் வெளியேற்றப்பட்ட தமிழ் தொழிலாளர்கள்!

—

## உண்ணாவிரதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களில் எல்லாம் ஏதோ பெரும் யுத்தமுனையில் உலவுவது போல பொலிஸ் டிறக்குகளும், இராணுவஜீப்புகளும ஆயுதந்தாங்கிய பொலிஸ் படையும் அங்கும் இங்கும் திரிந்தாலும் அதைப்பற்றி உண்ணாவிரதத்தொண்டர்களோ — பொதுமக்களோ பொருட்படுத்தியதாக தெரியவில்லை.

நாள்தோறும் உண்ணாவிரதம் தொடங்கும் போதும், முடியும் போதும் தமிழ் தேசிய கீதம் பாடப்படுவதுடன், கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன. இக் கருத்தரங்குகளில் தமிழர் கூட்டணித் தலைவர்களும், இளைஞர் பேரவை உறுப்பினர்களும் உரையாற்றுகின்றனர். பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு கொள்கை விளக்கம் பெற்றுச் செல்வதை நாள்தோறும் காணக் கூடியதாக இருக்கிறது.

உண்ணாவிரதத்தினால் ஏற்பட்டுவரும் எழுச்சியினைக் காணும் போது — 1961ம் ஆண்டு சத்தியாக்கிரக காலத்தில் ஏற்பட்டிருந்த எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

இவ்வாரம் உண்ணாவிரதம் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

21-9-73 முதல் 24-9-73 வரை வட்டுக்கோட்டை.

24-9-73 முதல் 27-9-73 வரை சாவகச்சேரி.

27-9-73 முதல் [illegible] வரை உடுப்பிட்டி.

## தமிழரசுத் தலைவர் இரங்கல்!

'தமிழினத்தின் விடுதலைக்காகத் தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து உழைத்த ஓர் உண்மைத் தொண்டரை தமிழ் இனம் இழந்துவிட்டது.

1956ம் ஆண்டு தமிழ் உரிமை மறுக்கப்பட்ட நேரத்தில், அறப்போர் அணியைத் தொடக்கி கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞரை, தமிழ் உரிமைப் போருக்குத் தயார்செய்த முன்னணி வீரரை நாம் இழந்து விட்டோம்.

1961ம் ஆண்டு பனாகொடைச் சிறையில், ஈழத் தமிழ் நாடு என்று இன எழுச்சிக் கீதத்தை இயற்றியவரும் அவரே. அவரின் பிரிவு தமிழ் இனத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

—இவ்வாறு திரு ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் மறைவு குறித்து தமிழரசுக் கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்திகளில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈழத் தமிழர்

(1,ம் பக்கத் தொடர்ச்சி)

யாவது இலங்கைத் தமிழர்கள் புதிய உற்சாகம் பெறுவார்கள்.

இந்திரா காந்தி எங்கெங்கோ உள்ளவர்களுக்கு குரல் கொடுக்கிறார். பக்கத்தில் இருக்கிற இலங்கைத் தமிழர்களுக்கு இதுவரை குரல் கொடுக்க வில்லை. இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்பற்றித் தெரிவிப்பதற்குக் கூட இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நினைக்க வில்லை. இதற்குக் காரணம் அந்தத் தூதுவர் தமிழராக இல்லாமல் இருப்பதுதான் என்றார்.

சிங்களவர்களுக்கு அடுத்தபடியாக பெரும்பான்மையுடன் இருப்பவர்கள் தமிழர்கள்தான். ஆகவே அவர்கள் நலனைக்கருதும் வகையில் இலங்கையில் தமிழர் ஒருவரை இந்தியத் தூதராக இந்திய அரசு நியமிக்க வேண்டும்.

மேலும் இக்கூட்டத்தில் இலங்கை ஏ. எஸ். மணவைத்தம்பி, புலவர் சேதுராமன், மாணவர் கோபிநாத், கல்லை ஆ. துரை, ஈரோடு ஆற்றலரசு, கோ. மன்னிஸ் செல்வம், இலங்கை கமலநாதன், புலவர் தமிழ்[illegible] [illegible] ஆகியோர் பேசினர்.

# தனிநாடு கோரிக்கை ஆபத்தான விளையாட்டாம்! குய்யோ முறையோ என்று அரற்றுகிறது குணசேன ஏடு!

"இந்த நாட்டின் உள் விவகாரப்பிரச்சினையில் இந்திய தலையீட்டை ஏற்படுத்தும் நோக்குடன் — தமிழ் நாட்டுடன் தமிழர் கூட்டணி கொண்டுள்ள தொடர்பு பாரதூரமான விளைவுகளை இங்கும் வெளிநாடுகளிலும் ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான விளையாட்டாகும்.

"இந்நாட்டின் சுதந்திரத்தையும் ஐக்கியத்தையும் பிளவுபடுத்துவதற்கு இந் நாட்டிலுள்ள தமிழ் சிறுபான்மையினர் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செய்து வரும் சதி முயற்சிகளை பொறுப்புள்ள இந்தியத் தலைவர்கள் புத்தி பூர்வமாக நிராகரித்துவந்துள்ளனர்.

"திருமதி இந்திராகாந்தி, சரியான நிலையைப் புரிந்து கொண்டு, இலங்கை அரசுடனேயே பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத்தீர்த்துக்கொள்ளும்படி தமிழர் கூட்டணிக்கு எடுத்துக்கூற பின்நிற்க மாட்டாரென்று நாம் நம்புகிறோம்.

"பெடரல்கட்சி, தனது பெயரை மாற்றிக்கொண்டு இருக்கிறதே தவிர — அதன் கொள்கையை மாற்றிக் கொள்ள வில்லை. அதன் தலைவர் திரு. செல்வநாயகம் இராசதந்திரத்தின் எல்லா அம்சங்களையும் பிரயோகித்துப் பார்த்து விட்டார். ஒரு தடவை தேசிய அரசாங்கத்தின் பங்கு தாரராகவும், அவரது கட்சி செயல்பட்டும் பார்த்தது. இவற்றினாலெல்லாம் தமது இலட்சியத்தை நிறைவேற்றமுடியாத அவர் தமிழ் இனத்திலிருந்த வேறுபட்டகருத்துக்கள் கொண்ட சில பிரிவினரையும் தம்முடன் சேர்ந்து தமிழர் கூட்டணி அமைத்துக்கொண்டு தனி ஆட்சி கேட்கத் தொடங்கி விட்டார்.

'தேசபக்தியற்ற இந்தச் செயலை தமிழர் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் இனத்திலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்களும் கண்டிக்க முன்வராதது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

'யேகோவாவின் சாட்சிகள் முன்பு ஒரு தடவை தங்கள் விசுவாசம் ஆண்டவனுக்கே தவிர— மனிதனுக்கல்ல என்ற அடிப்படையில் அமெரிக்க கொடிக்கு வணக்கம் தெரிவிக்க மறுத்து பத்திரிகைச்செய்திகளில் முதலிடம் பிடித்தனர். ஆனால் ஆண்டவனுக்கு விசுவாசம் தெரிவிப்பது வேறு — தனிக் கொடியுடன், தனிநாடொன்றை அமைக்க முயல்வது வேறு. முதலாவது எங்கள் மரியாதையை பெறக் கூடியது; இரண்டாவது எங்கள் வெறுப்பை மட்டுமே பெறக்கூடியது.

தமிழர் கூட்டணியின் இறுதிக்கோரிக்கை — சுயாதீனமும், இறைமையும் சுதந்திரமுமுள்ள இலங்கையின் இருதயத்தில் ஈட்டி கொண்டு குத்துவதுபோன்றதாகும்."

—'சன்' ஆசிரியர் தலையங்கம் (15-9-73)

## புதிய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைகட்டடங்களைத்திருத்தி 1-6-73க்கு முன் தருமாறு வேலணைக் கிராமசபைத் தலைவருக்கு எழுதிய 19-2-73ஆம் திகதிக் கடிதத்தின் பிரதியையும் எனக்கு அனுப்பியிருந்தார்.

இவ்வாறு அரசாங்க அதிபர் வேலணையில் காரியாதிகாரி அலுவலகத்தைத் திறப்பதற்கு முயற்சி செய்யும் பொழுது ஓர் அரசியற் கட்சியின் போர்வையினால் வயிறு வளர்க்கும் இந்தத் தரகர்கள் பின்கதவால் திடீர் பதவி பெற்ற இவர்களின் தலைமைத் தரகரின் உதவியுடன் இதை நிறுத்துதற்கும் வேலணை புங்குடு தீவு எனும் இரண்டு காரியாதிகாரி அலுவலகங்களுக்குப் பதிலாக ஒன்றினை மட்டும் புங்குடுதீவில் நிறுவுவதற்கும் முயற்சி செய்தனர். இவர்கள் யார் என்பதை மாண்புமிகு அமைச்சர் பீலிக்ஸ். டயஸ். பண்டாரநாயக்கா அவர்களும் எனக்குக் கூறியுள்ளார். இவர்கள் யார் என்பது இப்பொழுது பலருக்குத் தெரியும்.

இவர்களின் தலைமைத் தரகரை நான் சந்தித்த பொழுது இரண்டு காரியாதிகாரி அலுவலகங்களை ஒன்றாக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களே என்று தெருட்டினேன். மேடைகளில் மட்டுமன்றி பாராளுமன்றத்திலும் இவர்களுடைய முகமூடி விரைவில் கிழித்தெறியப்படும்.

இவர்களுடைய முயற்சி வெற்றிபெறவில்லை. நீதியும் நியாயமும் வெற்றிபெற்றன. மாண்புமிகு அமைச்சர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் சிபார்சுப்படி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செய்தமுடிபினை மாற்றவில்லை. இதனாலேயே இன்று இந்தக் காரியாலயம் திறக்கப்படுகின்றது. எனினும் புங்குடுதீவில் காரியாதிகாரி அலுவலகம் திறக்கப்படடபின்தான் நான் மகிழ்ச்சி அடைவேன்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்படி புங்குடுதீவில் காரியாதிகாரி அலுவலகம் திறக்கப்படும். அங்கு ஒன்று நிறுவப்படுமா என்னும் சந்தேகத்துக்கு இடம் கொடுக்காமல் உரிய காலத்தில் அதைச் திறக்கச்செய்ததற்கு என்னுடன் ஒத்துழைக்குமாறு மக்களை கேட்டுக்கொள்கின்றேன். ஊர்வேற்றுமையைக் கற்பித்து நச்சுப்பிரசாரம செய்துவரும் தரகர்களை நல்லது செய்ய முடியாவிடினும் நெஞ்சாரச் சூழ்ச்சி செய்தலை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும் நாணின்மை நின்றக்கடை."

(தமிழ்மறை)


### அறுவடை

"நல்ல விதை விதைத்தவனுக்கு நல்ல அறுவடை, கெட்ட விதை விதைத்தவனுக்கு அதற்கேற்ற அறுவடை, எத்தகைய வினையை ஒருவன் விதைக்கிறானோ அத்தகைய அறுவடை அவனுக்குரியது. பெருவாழ்வு என்னும் விதை விதைப்பவன் பேராளன் ஆகிறான்."

—சுவாமி சித்பவானந்தர்.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்:

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியசிங்கம் என்றோர் இயக்கம்

**தமிழ் இனத்துக்கு அரசியல் விழிப்பூட்டி சுதந்திரப் பாதையில் நடக்க வைத்த தமிழ் ஈழத்தின் தங்கம் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் 14-வது நினைவு நாளான 17. 9. 73 அன்று தமிழ் ஈழம்முழுவதும் தமிழ் மக்கள் அந்தத் தியாக மாமலையை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தினர். அமரர் வன்னியனாரின் தியாக வாழ்வை இக்கட்டுரையில் நினைவு கூருகிறார் 'கரிகாலன்'!**

தமதுகட்சியைத்தோற்றுவித்து, வளர்த்து, வழிநடாத்திச்சென்ற பான்மையால் அவர் தமிழரசுக் கட்சியின் தாயும் தலைவருமானவர் கோப்பாய்த் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராய் மக்களின் குறைகேட்டுத் தீர்த்தபான்மையால் அவர் மக்கள் தொண்டரானவர். கட்சிக் கூட்டங்களில் மாற்றாரின் கேள்விக் கணைகளுக்குப் பதிலடி கொடுத்த வன்மையால் அவர் சொல்லின் செல்வரானவர். குடியியல் வழக்குரையில் தலைசிறந்த தன்மையால் அவர் புகழ்பூத்த வழக்குரைஞரானவர். தீண்டாமை ஒழிப்புக்குத் தலைமை தாங்கியமையால் அவர் சமூகப்புரட்சியாளரானவர். தொகுதிநிர்ணய ஆணைக் குழுவின் முன் புள்ளிவிபரங்களுடன் வாதிட்டு எல்லைகளை வரையறுத்த திண்மையால் அவர் ஒரு தகவற்களஞ்சியமானவர். மலைநாட்டு மாணவர் பலருக்கு யாழ்ப்பாணத்தில் கல்வி வசதிக்கு ஏற்பாடு செய்தமையால் அவர் வள்ளலானவர். காலிமுகத்தில் தம்முடல் நலிய கல்லடியும் சொல்லடியும் தாங்கியமையால் அவர்காந்தியவாதியானவர். சிறைச்சாலை சென்று அதனைத் தவச்சாலையாக்கியமையினால் அவர் உண்மையான சத்தியாக்கிரகியானவர். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழினத்தின் பணியிலே ஈடுபடுத்தியமையால் அவர் தியாகியானவர்.

இத்தகை ஈடுபாடுகளும் ஓர் இயக்கத்திற்கேயன்றித் தனியொரு மனிதசக்திக்கு அரியவையாதலின், அமரர் வன்னியசிங்கம் ஒரு தனிமனிதரல்லர்; அவர் ஓர் இயக்கம் என்பேன்.

## கேந்திரமான இடம்:

தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் அமரர் வன்னியா வகித்த இடம் கேந்திரமானதாகும். 1947 — 1956 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பத்தாண்டுக் காலத்தில் இலங்கை அரசியலின் சுழியோட்டங்களை அவதானித்தவர்கள் வன்னியர் அரசியல் அரங்கிலிருந்திராவிடின் தமிழரசுக் கட்சி இறுதிவரை தனது தனித்துவத்தைக் காத்திருக்க முடியுமா என்ற ஐயத்தை எளிதில் நிராகரிக்க மாட்டார்கள்.

நாடாளுமன்ற முனையைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணத்தில் வன்னியர் வகித்த நிலைக்குக் கிழக்கு மாகாணத்தின் சார்பில் ஈடுகொடுத்தவரும், அமரர் வன்னியருடன் ஒப்பாராய்ப் பணியாற்றியவரும் திருமலைத் தீரரான அமரர் என். ஆர். இராசவரோதயம் அவர்களே.

## முதற் பரீட்சை:

1949ஆம் ஆண்டு தோற்றிய தமிழரசுக் கட்சி 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் முதன்முதலாகமக்கள் மன்றத்தை நேரடியாகச் சந்தித்தது. குழலிப் பருவத்துக் கட்சியின் குரல்வளையை நெரித்துவிடவெனப் பல அசுரசக்திகள் தமிழரசுக்கட்சிக்கெதிராக அணிதிரண்டு நின்றன. 1952ஆம் ஆண்டில் முதற் பரீட்சை, பிரதிநிதித்துவப் பலத்தைப் பொறுத்தவரை, தமிழரசுக் கட்சிக்கு விஷப்பரீட்சையாகவே முடிந்ததெனலாம். அத்தேர்தலில் கட்சியின் வேட்பாளர்கள் இருவரைத் தவிர தமிழரசுத் தந்தை செல்வா உட்பட அனைவரும் தோற்கடிக்கப்பட்டனர். வெற்றிபெற்றவர்களில் ஒருவர் கோப்பாயில் போட்டியிட்ட அமரர் வன்னியசிங்கம் அவர்கள்; மற்றவர் திருகோணமலையில் போட்டியிட்ட அமரர் இராசவரோதயம் அவர்கள்.

தமிழரசுக்கட்சி மேலெழுந்த வாரியாகத் தோற்கடிக்கப்பட்டிருப்பினும், வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத் தலைக்குஒருதலைவர் தேறியமை தற்செயலான தோ தெய்வச்செயலானதோ அறியேன். தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் அணியிலிருந்து முதன்முதலாகக் காலனால் கவரப்பட்டவர்களும் இவர்கள் இருவருமே என்பதும் அச்செயலின்பாற்பட்டதே. சேவையொன்றுக்காக அனுப்பப்பட்டவர்கள் தேவை தீர்ந்தவுடன் திருப்பியழைக்கப்பட்டார்கள் என்பதே தேற்றம்.

## சொல்லும் செயலும்:

அமரர் வன்னியர் தம் சொல்லுக்கும் செயலுக்குமிடையே பாலமமைத்துக் கொண்டவர். அரசியல் இலாபவேட்டைக்காக நாளுக்கொரு பேச்சை ஆளுக்கேற்ப நிகழ்த்தியவரல்ல. தமக்குச் சரியெனப்பட்டதைக் காய்தல் உவத்தலற்ற நடுகண்மையுடன் சாற்றியவர். சாற்றியதைச் சாற்றியவாறே போற்றியவர்; போற்றிய கருத்தை நடைமுறையிலும் புரிந்தவர்.

உதாரணமாக, வைதிகக் குடும்பமொன்றின் குலவிளக்காகப்பேணிவளர்க்கப்பட்ட அவர் மானியச் சமுதாயமொன்றின் மயக்கங்களையும் சமூக மாச்சரியங்களையும் உடைத்தெறியத் தலைப்பட்டார். தீண்டாமை ஒழிப்பு, சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற புரட்சிகரமான பிரகடனங்களைச் செய்தார். அப்பிரகடனங்களைப் பேணி நடைமுறையிலும் தாமே முன்னின்று நடாத்திக் காட்டினார்.

## எல்லாம் தமிழ்:

இன்னோர் நிகழ்வும் நினைவு கூரத்தக்கது. 1957-ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி பாரிய போராட்டமொன்றிற்குத் தயாரான வேளையில் கட்சித் தலைவர்கள் தமது தனிப்பட்ட தொழில்களை நிறுத்திவிட்டு முழுநேரக் கட்சிப் பணியில் ஈடுபடவேண்டுமெனக் கட்சி தீர்மானித்தது. யாழ்ப்பாண நீதிமன்றங்களில் தமது வளமான வழக்குரைஞர் தொழிலையும் புறக்கணித்துவிட்டுக் கட்சிப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்ட முதற்றலைவரும், கட்சியின் தீர்மானத்தை முழுமையாகச் செயற்படுத்தியவரும் அமரர் வன்னியரே. தமிழுரிமை இயக்கத்தின் ஓர் உறுப்பாக ''எல்லாம் தமிழ்'' இயக்கம் தொடங்கப்பட்டபோது தமது கருமங்கள், கடிதத் தொடர்புகள் எல்லாவற்றையும் தனித்தமிழில் நடாத்திப் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய தலைவரும் இவரே. அன்னார் மறையும்வரை இந்தத் தனித்தமிழ்க் கோட்பாட்டிலிருந்து அவர் வழுவியதில்லை.

ஈழத் தமிழினத்தின் சமூக அரசியல், பண்பாட்டுச் சிந்தனையோட்டத்தில் தனியொரு மனிதராக வன்னியர் ஏற்படுத்திய தாக்கமும் அன்னார் செலுத்திய செல்வாக்கும் மிகவும் காத்திரமானவை. அவற்றை இந்நாட்டின் வரலாற்று மாணவர் நிச்சயமாகக் குறிப்பெடுத்துக் கொள்வர். அன்னாரின் சீரிய பணியின் பரப்புசிறியதொரு கட்டுரையில் சிறைப்படுத்த முடியாதது.

## நீங்காத நினைவு:

வன்னியசிங்கம் என்ற இயக்கத்தின் நடமாட்டம் ஓய்ந்து இன்றுடன் பதினான்காண்டுகள் கடந்துவிட்டன. அன்னாரின் தொடர்பால் கனிந்த நினைவுகள் இப்பதினான்காண்டுக் காலத்தில் கருகிக்காய்ந்து விடவில்லை. மாறாக, அவை நெஞ்சின் பரப்பில் பசுமையுடன் பரிமளித்துக் கொண்டிருக்கின்றன. அமரர் வன்னியசிங்கம் தமிழ்மக்களுக்கு ஆற்றிய பணிகள் எமது தலைமுறையிலேயே கனிந்து பழுக்கவல்லன என நம்புகிறோம். ஒருவேளை எமது தலைமுறை அக்கனிகளைச் சுவைக்கத் தவறலாம். எனினும், துள்ளித்திரிந்தபள்ளிப் பருவத்திலே அமரர்வன்னியசிங்கம் என்ற தூண்டாமணி விளக்கின் ஒளியினிலே சமூக அரசியற் பாடங்களைப் படிக்கும் பேறுபெற்றோம் என்ற ஆன்ம திருப்தியாவது என போன்ற இளைஞர் சிலருக்குத் தேறும். அத்திருப்தி மிகவும் திவ்வியமானது. வாழ்க வன்னியர் புகழ்!

**கரிகாலன்**

# அமரர் அரியநாயகத்தின பூதவுடல் நல்லடக்கம்

## 'எங்கள் ஈழத் தமிழ்நாடு' கீதத்துடன் நடைபெற்ற இறுதி மரியாதை!

தீவிர தமிழ்த்தொண்டரும், தமிழரசுக் கட்சியின் பழம்பெரும் முன்னணி... ... ஒருவரும், தம்பிலுவில் — திருக்கோவில் மக்களின் ஈடிணையற்ற தலைவருமான அறப்போராணித்தலைவர் ஆர். டபிள்யூ. வீ. அரியநாயகம் அவர்களின பூதவுடல்தமிழரசுக் கட்சியின தலைவர்களும் தொண்டர்களும்பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கதறியழ 14. 9. 73ல் தம்பிலுவிலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஓர் நினைவுச் சின்னத்தையெழுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக மட்டுநகர் முதல் பா. உ. எழில் தமிழ் ஆளர் திரு. செ. இராசதுரை சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அமரர் அரியநாயகத்தின் இறுதியாத்திரை நாளான 14. 9. 73 அன்று, திருக்கோவில்—தம்பிலுவில் பகுதி முழுவதும் சோகம் நிறைந்து காணப்பட்டது. இப்பகுதியில் உள்ள கடைகளும் பொது நிலையங்கள் யாவும் அடைக்கப்பட்டிருந்ததுடன் காணுமிடமெங்கும் கறுப்பு, வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

தமிழரசுக்கட்சியின் [illegible] கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுத்தலைமைச் செயலகத்திலுள்ள மூவர்ணக் கொடியும் அரைக்கம்பத்தில்தாழப் பறந்தது.

திருக்கோவில் தம்பிலுவில் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததுடன், பட்டமாளிகைகளில் படக்காட்சிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் கண்களில் நீர்மல்க, சோகம் கப்பிய முகங்களுடன் திரு. அரியநாயகத்தின் இல்லத்தில் திரண்டிருந்தவர்.

பென்னம் பெரிய தமிழரசு மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்டிருந்த-அரியநாயகம் அவர்களின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை செந்தமிழ்ச் செல்வர் செ. இராசதுரையும்,கிழக்கின்பெருந்தலைவர் இராசமாணிக்கம் அவர்களும் துயரம் கப்பிய முகங்களுடன் தம் கைகளால் தொட்டுத்தூக்கி வந்த காட்சி அனைவரையும் கண் கலங்க வைத்தது.

இடுகாட்டில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் திரு. இராசதுரை பேசும்போது— திரு. அரியநாயகத்தின் மறைவு தமிழ் சமுதாயத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்றும் — திரு அரிய நாயகம் தமது வலதுகை போல விளங்கியவரென்றும் குறிப்பிட்டார்.

திரு. க. துரைரத்தினம், பா. உ. பேசுகையில் தமிழரசுக்கட்சி அதன் உண்மையான ஊழியர் ஒருவரை இழந்து விட்டதென்றார்.

திரு. க. ஜெயக்கொடி பா. உ. பேசுகையில் — திரு. அரிய நாயகம் மறைந்து விட்டாரென்ற செய்தியை இன்னும்கூட நம்ப முடியாமலிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

பொத்துவில் பா. உ. ஜனாப் மஜீத் பேசுகையில் — தமிழர்களுக்கும் இஸ்லாமியாகளுக்குமிடையே நல்லுறவை வளர்த்தவர் திரு. அரியநாயகம் என்று கூறினார்.

மட்டக்களப்பு தமிழரசுப் பிரமுகர் திரு. வ. பாலசிங்கம் பேசியபின்னர்-அனைவரும் எழுந்து நின்று அமரருக்கு இருநிமிட அஞ்சலி செலுத்தியபின்னர் — திரு. அரிய நாயகம் அவர்களால், பனாகொடை தடுப்புச்சிறையில் இருக்கும்போது எழுதப்பட்ட ''எங்கள் ஈழத்தமிழ் நாடு'' என்ற இன எழுச்சிக் கீதத்தை, சோகம் கப்பிய குரலில் திரு. செ. இராசதுரை பாடினார்.

இதையடுத்து அமரர் அரியநாயகத்தின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# எச்சில் வாழ்க்கை

( 6-ம் பக்கம் பார்க்க )

வாழ்க்கை முறையாக வகுத்துக்கொள்ளும் மனப் பாங்கு ஏற்படவில்லை, உத்தியோகங்களுக்கு மனுப்பண்ணிக் கிடைக்காத பட்சத்தில் விரக்தியோடு விவசாயத்தில் ஈடுபடும் நிலை முற்றாக மறையவேண்டும். வீட்டில் இருந்து பணம் பெற்றுக் கொழும்பில் உத்தியோகம் பார்ப்பவரிலும் விஸ்வமடுவில் விவசாயம் செய்பவரை விவாகம் செய்ய எம் பெண்கள் விரும்பும் நிலை வந்துவிட்டது. அது எம் சமுதாயத்தின் நிலையான வாழ்க்கை வழியாகவேண்டும். எந்த நிலை ஏற்பட்டால் ஆளுங்கட்சிகளின் அடிவருடிகள் பின் சென்று ஆயிரக்கணக்கான ரூபா பணத்தைக்கொடுத்து, அற்ப உத்தியோகத்துக்காக நூறு தடவை கொழும்பு சென்றுவரும் நிலையும் மறையும், சுயாதீனமாகத் தம் மனச்சான்றின் வழி நின்று இன விடுதலைக்கு உழைக்கும் இளஞ்சமுதாயம் உருவாகும்.

## இளைஞர்களுக்கு

என் அருந்தம்பிகளுக்கு ஒரு வார்த்தை கூறி விடைபெற நான் விரும்புகிறேன். தமிழினம் வாழ்வதா? தாழ்ந்வுறு அழிவதா? என்பது உங்கள் கைகளில்தான் தங்கி உள்ளது. நீங்கள் கிளர்ந்தெழாவிட்டால் எங்களுக்கு விடிவில்லை. இத்தாலிய நாட்டு இளைஞர்களைக் கரிபால்டி அழைத்தது போல உங்களை நாம் அழைக்கின்றோம். உடடினயாக நாம் தரக்கூடியது பொலிசாரின் அடி, பட்டாளத்தினரின் இடி, சிறை வாழ்க்கை, துன்பம், சில சமயம் வீர மரணமாகவும் இருக்கலாம். இவற்றைத் தாண்டிச் சென்றால் விடுதலை பெற்ற தமிழ் ஈழம், சாதி பேதம் ஒழிந்த தமிழர் சமுதாயம், உண்மையான சமதர்மம் மிளிரும் ஈழத் தமிழகம், ஆட்சி பீடத்தில் வீற்றிருக்கும். தமிழ் அன்னை, நெளியும் புழுப்போல நிலைமாறி வேலும், வாளும் தாங்கி பாராண்ட பழந் தமிழ் மறவர் போல, நவீன விஞ்ஞான வளர்ச்சியெல்லாம் பெற்று நிமிர்ந்து நிற்கும் இஸ்ரேல் நாட்டு இளைஞர் போன்ற ஓர் இளந் தமிழர் சமுதாயம் — இவற்றையெல்லாம் காணலாம். அந்த நாளை நோக்கி நடப்போம் வாருங்கள் என்று கேட்டு விடைபெற்றுக் கொள்கின்றேன்.

வாழ்க ஈழத் தமிழகம்,

வெல்க தமிழ் ஆட்சி,

அடைவோம் விர சுதந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் தொகுதியில் தமிழர் பாசறை (1)

இலங்கை வாழ் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பல்வேறு மாநாடுகளை நான் கண்டிருக்கிறேன் - அவற்றில் பங்குகொண்டிருக்கிறேன்.

1953ம் ஆண்டு காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்தி முடித்த கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடுதான் நான் கலந்துகொண்ட முதல் மாநாடாகும். அப்போது எனக்கு வயது பதினன்கு.

அந்த மாநாட்டில் அமரர் வன்னியனார் தமது வரவேற்புரையின் இறுதியில் சுட்டிக்காட்டிய ஒரு குறள் இன்றும் என் மனதில் ரீங்காரம் செய்தபடி இருக்கின்றது.

'துன்பமுறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'

என்பதே அந்தக் குறள் மணியாகும். வன்னியனார் சுட்டிக்காட்டிய அந்தக் குறளின் வழி நின்றுதான் இனத்தின் விடுதலைக்காக எண்ணற்ற இன்னல்களையும் சிறைவாசத்தையும், துன்ப துயரங்களையும் தாங்கியபடி நமது இயக்கம் வளர்ந்து வருகிறது.

இதற்குப் பின்னர், திருக்கோணமலையில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ் பெற்ற மாநாடும் என் நெஞ்சம் மறக்க முடியாத மாநாடாகும். தமிழ் ஈழத்தின் நான்கு திசைகளிலிருந்தும் திருக்கோணமலை நோக்கி பாதயாத்திரை மேற்கண்ட தமிழர் சமுதாயம் — அங்கு பல்லாயிரக்கணக்கில் கூடி, சிங்களம் மட்டும் சட்டத்திலிருந்தும், ஒற்றையாட்சிச் சிறையிலிருந்தும் எப்படியும் விடுபட்டே திருவது; தமிழின விடுதலையை நிலைநாட்டியே தீருவது என்று ஊரறிய உலகறிய உறுதியெடுத்த மாநாடு அதுவாகும்!

பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட நிலையில் — கொதிப்பேறிய சூழ்நிலையில் வவுனியாவில் 1958ம் ஆண்டு நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாடும் என்றும் மறக்க முடியாததாகும். இந்த மாநாட்டிலேதான், 1956ம் ஆண்டு ஆனி 5ம் நாள் தமிழ் சத்தியாக்கிரகிகள் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டதைப் பற்றி குறிப்பிட்ட அமரர் வன்னியசிங்கம், அத்தகைய நிலைதோன்ற தமிழரசுக் கட்சி மேற்கொண்டும் இடம் கொடுக்க மாட்டாதென்பதை வலியுறுத்தி— 'கடி நாய்களை கட்டி வையுங்கள்; இன்றேல் நாம் சுட்டுத் தள்ளுவோம்' என்று முழக்கமிட்டார். இந்த மாநாட்டைத் தொடர்ந்தே தென்னிலங்கையில் சிங்கள இனவெறி கட்டவிழ்த்துவிடப்பட்டு தமிழர்கள் தாக்கப்பட்டனர். இனக்கலவரம் மூண்டது.

இந்த மாநாடுகள் யாவற்றையும் விட அதி முக்கியத்துவமும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட மாநாடாக தமிழரசுக் கட்சியின் 12வது தேசிய மாநாடு அமைந்து விட்டது என்பதே என் அபிப்பிராயமாகும்!

முந்திய மாநாடுகள் நடைபெற்ற காலங்களில் இருந்த அரசியல் பரபரப்புகளையும் நெருக்கடிகளையும் விட நமது 12வது மாநில மாநாடு நடைபெற்ற இக்காலம் அரசியல் நெருக்கடிகளும் சோதனைகளும் மிகவும் அதிகரித்து விட்ட காலமாகும்!

முந்திய மாநாடுகள் யாவும் சோல்பரி அரசியலமைப்பு இந்நாட்டில் நடைமுறையிலிருந்த காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. காங்கேசன்துறை மாநாடோ சோல்பரி அரசியல் திட்டம் அகற்றப்பட்டு — தமிழினத்தை அடிமைப்படுத்தும் புதிய சிங்கள அரசியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது தமிழ்தேசிய இனத்தின் மாநாடாகும்!

தமிழ்தேசிய இனத்தின் உரிமைகளை மறுத்து—தமிழ் மக்களை அடிமைகளாக்கும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்காக போராடுவதற்கென சகல தமிழ் அரசியற் கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் கூட்டணி 1972ம் ஆண்டு மே திங்கள் 14ம் நாள் திருக்கோணமலைத் திருநகரில் உருவாகிய பின்னர், அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சி முதன் முதலாக கூட்டிய தேசிய மாநாடு காங்கேசன்துறை மாநாடுதான்!

புதிய அரசியல் சட்டத்தை தயாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில்

## காங்கேசன்துறை மாநாடும் காலம் உணர்த்தும் முக்கியத்துவமும்

தமிழரசுக்கட்சி பல கோரிக்கைகளை முன் வைத்தது; 7-2-1971ல் வல்வையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளாலும் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒன்பது அம்சக் கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

இக்கோரிக்கைகளில், பாதிவழி இறங்கிவந்து சிங்களத்தலைவர்களுடன் சமரசம் காணத்தயாராக நமது தலைவர்கள் இருந்தும்—அத்துறையில் அரசியல் நிர்ணய சபைக்கு வெளியே இன்றைய அரசாங்கத்தின் அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திப்பார்த்தும்—எதுவுமே கைகூடாத நிலையில் தமிழினத்தின் சுயமரியாதையைக்காத்திடும் நோக்குடன் 28-6-71ல் தமிழரசுக்கட்சி அ. நி. சபையை பகிஷ்கரித்து வெளியேறியது தமிழ் மக்கள் அறிந்த சம்பவமாகும். அதையடுத்து நடைபெற்ற அரசியல் சம்பவங்களை சற்று அசைபோட்டுப் பார்த்தால்தான் இந்த மாநாட்டின் முக்கியத்துவம் நமக்குப்புரியும்.

இதன் பின் தமிழர் கூட்டணி 14-5-72ல் உருவாகியது. 1972 மே 22ம் நாள் சிங்களப்பகுதிகளில் சிங்கள மக்கள் புதிய குடியரசு அரசியல்சட்டம் நடைமுறைக்கு வந்ததை கொண்டாடி குதூகலித்த வேளையில் — இலங்கையின் தமிழ் பிரதேசத்தில் அனைத்துத்தமிழ் மக்களும் கட்சி வேறுபாடின்றி துக்கம் அனுட்டித்து, கடைகள், பொது நிலையங்களைப்பூட்டி கறுப்புக்கொடிகளை உயர்த்தி பரிபூரண ஹர்த்தால் அனுட்டித்து தங்கள் எதிர்ப்புக்களை எடுத்துக் காட்டினர்.

1972 மே 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் தமிழ் மாணவர்கள் கல்லூரிகளையும், பாடசாலைகளையும் முற்றாகப் பகிஷ்கரித்தனர்.

24-5-72ல் யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற குடியரசு அரசியல் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறாத புதிய அரசியல் சட்டத்தின் பிரதிக்கு தீமூட்டி எரித்தார் பெரியவர்—தமிழர் தந்தை செல்வா!

இந்த அரசியல் சட்ட எதிர்ப்பு ஹர்த்தால் போராட்டத்தை யடுத்து— உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், உட்பட அறுபதுக்கு மேற்பட்ட, தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டனர்; அவர்களில் பலர் கடந்த ஓராண்டுக்குமேலாக விசாரணையின்றி சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் பின்னர் 25-6-72ல் தமிழர் கூட்டணி மீண்டும் கூடி புதிய அரசியல் சட்டத்தில் தமிழினத்தின் பாதுகாப்புக்காக இடம் பெற வேண்டிய ஆறு அம்சக் கோரிக்கைகளொன்றை ஆட்சியாளருக்கு அனுப்பி வைத்ததுடன் இதுசம்பந்தமாக 30-9-72க்கு முன்னர் —அதாவது மூன்று மாத காலத்தில் — ஆட்சியாளர் நடவடிக்கை யெடுக்காவிட்டால் — சுயநிர்ணய அடிப்படையில் தமிழினத்தின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு சாத்வீகப் போராட்டத்தில் குதிப்பது என்று எச்சரிக்கையும் விடுத்தது.

**எஸ். ஆர். எம்.**

மூன்று திங்கள் கழிந்தும் ஆணவம் பிடித்த ஆட்சியாளர்கள் தமிழினத்தின் கோரிக்கைகளையிட்டு — எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் தமிழ் தேசிய இனத்தை அலட்சியப்படுத்தி உதாசினம் செய்துவிட்ட காரணத்தினால் —தமிழினம் மீண்டும் குமுறி எழுந்தது!

அதன் பலன்—1972 அக்டோபர் 2ம் நாள் தமிழ் ஈழம் முழுவதும் மீண்டும் பூரண ஹர்த்தால் நடைபெற்றது; பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. அக்டோபர் 3ம் நாள் தமிழர் தந்தை செல்வா அவர்கள், புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று ஆட்சியாளர் கூறிவருகின்ற பொய்க் கூற்றுக்கு சவால் விடுத்தும் — புதிய அரசியல் சட்டத்தை தமிழினம் ஏற்க வில்லை என்பதை ஜனநாயக ரீதியில் நிலைநாட்டும் பொருட்டும்— தமது தேசிய பேரவை உறுப்பினர் பதவியை துறந்து— ஆட்சியாளரை அறை கூவி அழைத்தார்.

'என்னுடன்போட்டியிடுங்கள்; நான் தோல்வியடைந்தால் அரசியலிலிருந்தே ஒதுங்கி விடுகிறேன்; நீங்கள் தோல்வியடைந்தால் புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற பொய்ப் பிரசாரத்தை நிறுத்துங்கள்'— என்று அந்த முதுபெருங்கிழவர் விடுத்த சவாலை சந்திக்க வக்கின்றி வகையின்றி —ஓராண்டாகியும் இன்று வரை இடைத்தேர்தலை நடத்தாது தமிழ் மக்களை அவமதித்து வருகின்றனர் ஆட்சியாளர்கள்!

தமிழ் ஈழத்துக்கு வருகை தரும் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி பிடித்து [illegible] தமிழர் கூட்டணி முடிவெடுத்து — 15-1-73ல் முதல் முதலாக அமைச்சர் குமாரசூரியருக்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தொடர்ந்து தமிழ் ஈழத்துக்கு வருகை தரும் அமைச்சர்கள் கறுப்புக்கொடி வரவேற்பைப் பெற்று வருகிறார்கள்.

தமிழ் ஈழத்துக்கு சென்றிருந்த நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா விஜயத்தைப்பகிஷ்கரித்து யாழ்குடாநாடு முழுவதும் 10-3-73ல் மாபெரும் ஹர்த்தால் ஒன்று நடைபெற்றது. கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து—தமிழரசு வாலிப முன்னணி செயலாளர் திரு. சோ. சேனாதிராசா, முத்துக்குமாரசாமி உட்பட மீண்டும் ஏராளமான இளைஞர்கள் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் சிறைபிடிக்கப்பட்டு, இன்று வரை நீதி விசாரணையோ விடுதலையோ இன்றி அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அநீதியை எதிர்த்து 15-3-73ல் யாழ் குடா நாடு முழுவதிலுமுள்ள மாணவ மாணவிகள் பொங்கியெழுந்து தமிழ் இளைஞர் பேரவையின் வேண்டுகோட்படி ஒரு நாள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து போராட்டம் நடத்தினர். அதே சமயம் தமிழர் கூட்டணித்தலைவர்களும் தேசிய பேரவை உறுப்பினர்களும் அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து அன்றைய தினம் யாழ் நீதிமன்றத்தின் எதிரே ஒருநாள் உண்ணாவிரதமிருந்தனர்.

இதன் பின்னர்—6-4-73ல் —புத்தூர் பஞ்சசீக பாடசாலையில் படித்துவந்த தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களத்தை போதனமொழியாக திணிக்கும் அநீதியை எதிர்த்து— அரசின் கல்விச்சட்டத்தையே மீறி — திருமுருகன் தமிழ் பாடசாலையென்ற பெயரில் அரசாங்கப் பாடசாலைக்கு போட்டியாக தனியொரு பாடசாலையை தமிழர் கூட்டணி புத்தூரில் ஆரம்பித்து — அதன் முகாமையாளர்களாக ஐவரைத்தெரிவுசெய்து — சட்டத்தை மீறுகின்ற அந்த ஐவரின் பெயரை அரசுக்கும் அறிவித்தது.

ஆனால் சட்டமறுப்புத் தமிழ்ப் பாடசாலை இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது — முதுகெலும்பற்ற ஆட்சியோ தமிழர் கூட்டணி மீது நடவடிக்கையெடுக்க அஞ்சி பின்வாங்கிவிட்டது.

சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்யும்படியும் அவர்கள் துன்புறுத்தப்படுவதைக்கண்டித்தும்— அரசாங்க அனுமதி பெறாமலே சட்டத்தை மீறி ஓர் நடைபவனியை—கண்டன ஊர்வலத்தை— தமிழ் இளைஞர் பேரவை 20-5-73ல் நடத்தி தமிழ் மக்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது.

22-5-73ல் புதிய அரசியல் சட்டம் வந்த முதலாவது குடியரசு நாளை சிங்கள மக்கள் கொண்டாடிய அதே வேளையில் தமிழ ஈழமக்கள் அதைப் பகிஷ்கரித்து —தங்கள் பகுதிகளில் வைபவரீதியாக உதயசூரியன் கொடிகளை ஏற்றி, தமிழ்தேசிய கீதம் பாடி-ஈழத்தமிழ் நாட்டின் சுதந்திரத்திற்கு போராடுவதென்று உறுதியெடுத்தனர்.

தமிழர் கூட்டணியும் 22-5-73ல் கூடி— தமிழ்த் தேசிய இனத்தின் தாயகத்தில் சுயநிர்ணய அடிப்படையில் சுயாட்சியை நிறுவுவதே இனி தமிழினத்துக்கிருக்கின்ற ஒரே வழியென்று முடிவுசெய்து, அந்த முடிவை தனது அங்கத்துவ கட்சிகளின் ஆலோசனைக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்தது.

மே 22 — என்ற எனது நூலை வெளியிட்டதற்காக மண்டூரைச்சேர்ந்த இளைஞர் மகேந்திரன்—போதிய காரணம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருக்கிறார் விசாரணை ஏதுமின்றி!

22-7-73ல் கூடிய தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு சட்டமறுப்பு இயக்கத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு முடிவு செய்து காந்தி ஜெயந்தி தினமான இந்த ஆண்டு அக்டோபர் 2ந் திகதி முதல் அதைச்செயல்படுத்துவதென்று தீர்மானித்து — தமிழ் மக்களை அறை கூவி அழைத்திருக்கிறது!

இவ்வளவு சம்பவங்களையும் நான் இங்கு தொகுத்துக் கூறியிருப்பது வாசகர்களுக்கு 'போர்' அடிப்பதற்காக அல்ல; தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாடு நடைபெற்ற காலத்தின் அரசியல் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிடத்தான்!

தமிழினத்தின் அரசியல், வாழ்வில் என்றுமில்லாத நெருக்கடியும் கடந்த ஓராண்டாக ஒற்றுமைப்பட்ட தமிழினம் நடந்து வருகின்ற கல்லும் முள்ளும் நிறைந்த போராட்டப் பாதையும்— ஐக்கிய இலங்கையில் சிங்கள மக்களுடன் இணங்கி வாழுதலில் அறவே நம்பிக்கை இழந்துவிட்ட தமிழினம் தனியே பிரிந்து தனியாட்சி அமைப்பதுபற்றி சிந்திக்கின்ற நிலையும் — இவையெல்லாம் சேர்ந்து தமிழரசு மாநாட்டின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச்செய்துவிட்டன.

அரசியல் பற்றி மனம் திறந்து பேசவே மக்கள் அஞ்சுகின்ற காலம் இது; அதுவும் தமிழ் மகன் எவனாவது அக்கம் பக்கம் பாராது, அரசியலில் சற்று உணர்ச்சிவசப்பட்டு ஏதாவது சொல்லி விட்டால், விசாரணை ஏதுமின்றி உடனடியாக சிறைச்சாலைக்குள் தள்ளப்படும் பயங்கர காலம் இது!

அண்மையில் ஒரு ஜெர்மன் பத்திரிகையாளர் என்னைச் சந்தித்தார். இலங்கை அரசியல் — தமிழர் நிலை பற்றி பல விடயங்கள் பற்றி அவர் என்னுடன் கலந்து பேசினார். அப்போது அவர் கூறிய ஒரு விடயம்— நாட்டிலிருக்கும் ஒரு பயங்கரமான நிலையைத்தெளிவுபடுத்துவதாக இருந்தது.

"என்ன — உங்கள் நாட்டில் அரசியல் பற்றிப் பேசவே மக்கள் அஞ்சி நடுங்குகிறார்களே; அப்படிப் பேசுகிறவர்களும், அக்கம் பக்கம் பார்த்து விட்டு காதோடு காதாக குசுகுசுக்கிறார்களே" — என்று கேட்டார்.

அவ்வளவு தூரம்—மக்கள் அஞ்சும்படியான ஆட்சி இங்கு நடைபெறுகிறது. எதற்கெடுத்தாலும் அவசரகாலச் சட்டம் ஏவிவிடப்படுகிறது! இம் என்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம் எனும் நிலை!!

இத்தகைய நெருக்கடியும் சோதனையும் நிறைந்த கால கட்டத்திலேதான் தமிழரசுப் பாசறை வீரர்கள் தமது 12வது மாநில மாநாட்டினைக் காங்கேசன் துறையில் கூட்டினர் எனும் போது — அதிலே முக்கியத்துவம் இருப்பதும் தமிழரசு மாநாட்டின் முடிவினை அறிந்திடுவதில் தமிழர் சமுதாயம் மட்டுமன்றி அகில உலகமும் ஆர்வம் காட்டியதிலும் என்ன ஆச்சரியம்?

—தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

லிடோ (யாழ் நகர்)



ஏ. வி. எம். ராஜன், ரவிச்சந்திரன்,
லட்சுமி, சாவித்திரி, சந்திரகலா,
சோ (இரட்டை வேடம்) மனோரமா,
ஆனந்தன்

# புகுந்த வீடு

## 247வது தினம்

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) யோகநாயகி (வல்வெட்டித்துறை)

சிவாஜிகணேசன் — வாணிஸ்ரீ —நடித்த—

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

## இரண்டாவது வெற்றி வாரம்

பிளாசா (வெள்ளவத்தை)

ஜெய்சங்கர் லட்சுமி முத்துராமன்
நிர்மலா சந்திரபாபு —நடித்த—

# கண்ணன் வருவான்

## 4வது வாரம் செல்லமகால்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர்
ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும் இழக்கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள் ஏன்? யாருக்காக?

வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்)

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்

எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிமகாலிங்கம்



பிரமிளா
என். எம். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

## கெயிட்டி

ஜெய்சங்கர், லட்சுமி,
முத்துராமன், நிர்மலா,
சந்திரபாபு, விஜயலலிதா
மேஜர் சுந்தரராஜன் மனோகர்
நடித்த

காதலித்தவனை மணக்க முடியாது கட்டியவனை கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என வாழ்ந்த ஓர் கற்புக்கரசியின் கதை.

# கண்ணன் வருவான்

## மீண்டும் உங்களை மகிழ்விக்க காட்சி தருகிறது

100 நாட்களுக்குமேல் கொழும்பில் ஓடிய திரைப்படம்
குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்

## சென்ரல் திரையில் காண உடனே முந்துங்கள்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், வரலட்சுமி, ராகவன் நடித்த

# சவாலே சமாளி

(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில்
... செப்டெம்பர் மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது